بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡد

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

தொகுதி 8

இதழ் 36

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஹிஜ்ரி கமரி 1445 - ஸஃபர் 20 ஹிஜ்ரி ஷம்ஸி 1402 - தபூக் 07
07 செப்டம்பர் 2023

## அல்லாஹ்வின் கட்டளை

وَمَنۡ کَانَ فِیۡ هٰذِہٖۤ اَعۡمٰی فَهُوَ فِی الۡاٰخِرَۃِ اَعۡمٰی وَاَضَلُّ سَبِیۡلًا ﴿۷۳﴾

**பொருள் :**
இந்த உலகத்)தில் குருடராக இருப்பவர் மறுமையிலும் குருடராகவே இருப்பார். மேலும் அவர் (மற்றெல்லாரையும் விட) மிகவும் வழிதவறியவராக இருப்பார்.

(பனீ இஸ்ராயீல் : 73)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

## ஜமாஅத்தில் ஒரு தூய மாற்றம் ஏற்பட வேண்டும் என்று எனக்கு மிகுந்த வேதனையும் துடிப்பும் இருக்கின்றது. நீங்கள் உங்களிடத்தில் ஒரு மாறுதலை உருவாக்குங்கள். மேலும் ஒரு புதிய மனிதராக ஆகிவிடுங்கள்

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து......

ஜமாஅத்தில் ஒரு தூய மாற்றம் ஏற்பட வேண்டும் என்று எனக்கு மிகுந்த வேதனையும் துடிப்பும் இருக்கின்றது. எனது ஜமாஅத்தின் மாற்றத்தைக் குறித்து எனது உள்ளத்தில் என்ன சித்திரம் உள்ளதோ அது தற்போது வெளிப்படவில்லை. மேலும், இந்நிலையைக் காணும்போது لَعَلَّكَ بَاخِعٌ نَّفۡسَكَ اَلَّا يَكُوۡنُوۡا مُؤۡمِنِيۡنَ ﴿۴﴾ என்பதே எனது நிலையாக உள்ளது. சில சொற்களை கிளிப்பிள்ளையைப் போன்று பைஅத் செய்யும் நேரத்தில் மனனம் செய்து கொள்வதை நான் விரும்பவில்லை. அதனால் எந்தப் பயனும் இல்லை. உள்ளத்தை தூய்மைப்படுத்துவதற்கான அறிவை பெற்றுக் கொள்ளுங்கள். அதற்கான தேவையே உள்ளது. ஈஸா மஸீஹ் (அலை) மரணம் மற்றும் உயிருடன் இருத்தல் ஆகியவற்றில் சண்டையிடுவது மற்றும் தர்க்கம் செய்து கொண்டு திரிவது ஒருபோதும் நமது நோக்கம் கிடையாது. இது ஒரு தரம் குறைந்த விஷயம் ஆகும். அது ஒரு தவறாக இருந்தது. அதனை நாம் சீர்திருத்தி விட்டோம். ஆயினும், நமது பணியும், நமது நோக்கமும் இன்னும் இதிலிருந்து வெகு தொலைவில் உள்ளது. அந்தப் பணி என்னவென்றால்,நீங்கள் உங்களிடத்தில் ஒரு மாறுதலை உருவாக்குங்கள். மேலும் முற்றிலும் ஒரு புதிய மனிதராக ஆகிவிடுங்கள். எனவே உங்களில் ஒவ்வொருவருக்கும் இது அவசியம் ஆகும். அதாவது, நீங்கள் இதன் இரகசியத்தை புரிய வேண்டும். மேலும், நான் வேறு ஒருவன் ஆவேன் என்று உங்களை நீங்கள் கூறும் வகையில் உங்களிடத்தில் மாறுதலை ஏற்படுத்த வேண்டும்.

நான் மீண்டும் கூறுகின்றேன்: மிக நிச்சயமாக ஒரு காலம் வரை எமது தோழமையில் தங்கியிருந்து நான் வேறொரு மனிதராகிவிட்டேன் என்று ஒருவர் கருதாத வரை அவருக்கு எந்தப் பயனும் இல்லை. இயல்பு மற்றும் அறிவின் நிலை மேலும் உணர்ச்சியின் நிலை ஆகியவற்றில் உயர் தரமான தூய்மையைப் பெற்று விட்டால் பின்னர் சிறிது விஷயம் உள்ளது. இல்லையென்றால் எந்தப் பயனும் இல்லை. உலகத்தின் பணிகளை விட்டுவிடுங்கள் என்பது எனது இந்தக் கருத்தின் பொருள் இல்லை.

இதன் தொடர்ச்சி : 9ம் பக்கம்

## நபிமொழி

(2426) ஹஸ்ரத் உபை பின் கஅப் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: எனக்கு ஒரு பணப் பை கிடைத்தது. அதில் நூறு தீனார்கள் இருந்தன. நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் சென்றேன். அன்னார் (ஸல்) கூறினார்கள்: ஆண்டு முழுவதும் (மக்களுக்கு மத்தியில்) அதனை அறிவித்து வாருங்கள். ஆக, ஆண்டு முழுவதும் அதன் உரிமையாளரை தேடி வந்தேன். அதன் அடையாளத்தை அறிந்த எவரும் எனக்கு கிடைக்கவில்லை. பின்னர் நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் சென்றேன். அன்னார் (ஸல்) கூறினார்கள்: மேலும் ஒரு வருடம் அதன் உரிமையாளரைத் தேடுங்கள். ஆக, நான் அதன் உரிமையாளரைத் தேடினேன். ஆனால், எவரும் எனக்கு கிடைக்கவில்லை. பின்னர், நான் மூன்றாவது முறையாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் சென்றேன். அன்னார் (ஸல்) கூறினார்கள்: அதன் பையையும், அதன் முடிச்சையும் பாதுகாப்பாக வையுங்கள். மேலும், அதன் எண்ணிக்கையையும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். அதன் உரிமையாளர் வந்து விட்டால் நல்லது ; இல்லையென்றால் அதிலிருந்து பயன் அடைந்து கொள்ளுங்கள். பின்னர் மக்காவில் எனக்கு அதன் உரிமையாளர் கிடைத்து விட்டார்.

ஹஸ்ரத் ஸய்யிது ஜைனுலாபீதீன் வலியுல்லாஹ் ஷாஹ் ஸாஹிப் (ரலி) அவர்கள் இந்த ஹதீஸிற்கு விளக்கமளித்தவாறு கூறுகின்றார்கள்: கீழே இருந்து ஒரு பொருள் ரொக்கமாகக் கண்டெடுக்கப்பட்டால் அதனை பாதுகாப்பாக வைக்க முடியும் என்பதால் அதன் உரிமையாளர் கிடைத்து விடாத வரை அதனை கண்டெடுத்த நபரிடம் அது அமானிதமாக இருக்க வேண்டும். ஆக, இரண்டு வருடங்கள் கழிந்த பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்னாருக்கு வழங்கிய வழிகாட்டல் இதுவாக இருந்தது. அதாவது, தீனார்களின் பையும், அதன் முடிச்சும் பாதுகாப்பாக வைக்கப்பட வேண்டும். மேலும், அது எண்ணிப் பார்க்கப்பட வேண்டும். ஏனெனில், எப்போது அதன் உரிமையாளர் வந்துவிட்டாலும் பை மற்றும் அதன் முடிச்சின் அடையாளத்தைக் கூறினால் பின்னர் அவருக்கு அதில் இருந்த அளவிலான தீனார்கள் கொடுக்கப்பட வேண்டும். இதற்கிடையிலான காலக் கட்டத்தில் அந்த தீனார்களிலிருந்து பயன் அடைந்து கொள்ளலாம்.இரண்டு வருடத்திற்கு பிறகு அதனை தற்காலிகமாக பயன்படுத்திக் கொள்வதற்கு அன்னார் (ஸல்) அனுமதி வழங்கினார்கள்.

(ஸஹீஹ் புகாரி, தொகுதி 4, காதியான் பதிப்பு-2008-ம் ஆண்டு)

## மக்கா முழுமையாக வெற்றிக் கொள்ளப்பட்டபோதும் கஃபதுல்லாஹ்விலிருந்து சிலைகள் உடைத்து வீசப்பட்டபோதும் அந்தநேரத்தில் இறைத் தூதர் (ஸல்) அவர்கள்

وَقُلۡ جَآءَ الۡحَقُّ وَزَهَقَ الۡبَاطِلُ ؕ اِنَّ الۡبَاطِلَ كَانَ زَهُوۡقًا ﴿۸۲﴾

**என்ற வசனத்தையே ஓதிக் கொண்டு சென்றார்கள்.**

وَقُلۡ جَآءَ الۡحَقُّ وَزَهَقَ الۡبَاطِلُ ؕ اِنَّ الۡبَاطِلَ كَانَ زَهُوۡقًا ﴿۸۲﴾

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இந்த வசனத்தின் விளக்கவுரையில் இவ்வாறு கூறுகின்றார்கள்: மதீனா வாழ்க்கை தொடங்கிய உடனேயே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஆற்றல் வலிமையாகிக் கொண்டே செல்லும். மேலும் அதிகரித்துக் கொண்டே செல்லும்; எதிரியின் பலவீனம் மற்றும் ஆற்றல் இன்மை, இயலாமை ஆகியவை நிகழ்ந்து கொண்டே செல்லும் என்ற விஷயம் இந்த வசனத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. எந்த அளவிற்கு என்றால் இறுதியில் பொய் பலவீனமடைந்து பலவீனமடைந்து முற்றிலும் அழிந்து விடும். மேலும், மக்கா வெற்றியின் நேரத்தின் போது அரேபியாவிலிருந்து சிலை வணக்கம் நிரந்தரமாக அழிக்கப்பட்டு விடும். இது திருக்குர்ஆனின் தன்னிகரற்ற சிறப்பாகும். அதாவது, அது ஒவ்வொரு சந்தர்ப்பத்திற்கும் எப்படிப்பட்ட சொற்களை தேர்ந்தெடுக்கின்றது என்றால் அவை ஒரு நீண்ட கருத்தை வலியுறுத்துகின்றது. இந்த வசனத்தில் زَهَقَ என்ற சொல் வைக்கப்பட்டுள்ளது. அந்த இடத்தில் هَلَكَ மற்றும் بَطَلَ என்ற சொற்களையும் பயன்படுத்தி இருக்க முடியும். ஆனால், زَهُوۡقًا என்ற சொல்லில் கூறப்பட்டுள்ள பொய்யின் அழிவைப் பற்றி கிடைக்கின்ற படிப்படியான

இதன் தொடர்ச்சி : 9ம் பக்கம்

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**ஜல்ஸா ஸாலானா யூ.கே-2023-ல் உலகம் முழுவதிலிருந்தும் கலந்து கொண்ட அஹ்மதிகள் மற்றும் அஹ்மதி அல்லாத விருந்தினர்களின் தாக்கங்கள் மற்றும் கருத்துகள்**

**நன்றி செலுத்துவது நமது பணியாகும். அல்லாஹ் செய்த அருட்கொடைகளுக்காக அவனுக்கு முன்னால் குனிந்துக் கொண்டே செல்வது நமது பணியாகும். மேலும், நாம் நமது இந்தக் கடமையை செலுத்திக் கொண்டே செல்லும்போதும், எல்லா வெற்றியையும் அல்லாஹ்வின் கருணை என்றும் அருள் என்றும் கருதியவாறு பணி செய்து கொண்டிருக்கும் வரையிலும் இன்ஷாஅல்லாஹ் நமது பாதங்கள் முன்னேறிக் கொண்டே இருக்கும்.**

**எல்லாவற்றையும் விட முதலில் என்னை எந்த விஷயம் மிகவும் தாக்கத்திற்குள்ளாக்கியது என்றால், ஆயிரக்கணக்கான நபர்கள் ஒரு பொது நோக்கத்திற்காக ஓரிடத்தில் ஒன்று கூடியுள்ளனர். ஒரு மார்க்கத் தலைவரைச் சுற்றி ஒன்றுதிரண்டுள்ளனர். அவர்கள் அனைவருமே ஒற்றுமையாக உள்ளனர். எல்லாருடைய நோக்கமும் ஒன்றாக உள்ளது -அஹ்மதி அல்லாத ஒரு விருந்தினர்**

**அஹ்மதிகளின் வாழ்க்கைகள் நிரந்தரமாக அல்லாஹ்வுடன் இணைக்கக் கூடியவையாக இருக்கும் அளவில் இந்த ஜல்ஸாவின் விளைவுளை அல்லாஹ் ஏற்படுத்துவானாக. மேலும், அவர்களின் ஈமானும், உறுதியும் அதிகரிக்கட்டுமாக!மேலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வருகையின் நோக்கத்தை அவர்கள் முழுமை செய்யக் கூடியவர்களாக திகழட்டுமாக!**

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 04ஆகஸ்ட் 2023** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1402 ஆண்டு **வஃபா** மாதம் **04ஆம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَا إِلَٰهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ
وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللهِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيمِ
بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

அல்ஹம்துலில்லாஹ் அல்லாஹ்வின் அருளினால் கடந்த ஜுமுஆவிலிருந்து ஞாயிற்றுக் கிழமை வரை அஹ்மதிய்யா ஜமாஅத் யூ.கே-வினுடைய ஆண்டு மாநாடு வெற்றிகரமாக நடைபெற்றது. மேலும் நிறைவு பெற்றுள்ளது. அவ்வப்போது காலநிலை மோசமாக இருந்தபோதிலும் அல்லாஹ்வின் அருளினால் பொதுவாக எல்லா ரீதியிலும்(நன்றாக இருந்தது). பொதுவாக ஏற்பாடு எந்த சிக்கலும் இன்றி நடைபெற்றுக் கொண்டிருந்தது. பின்னர் இந்த வருடம் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கையும் கடந்த வருடத்தை காட்டிலும் அதிகமாக இருந்தது.

இதற்காக அல்லாஹ்விற்கு நாம் எவ்வளவுதான் நன்றி செலுத்தினாலும் அது குறைவு தான். அவன் நமது ஜல்ஸாவை எண்ணற்ற அருட்களால் நிறைத்து விட்டான். மேலும், அதனை ஒவ்வொரு நபரும் உணர்ந்தனர். அவர் அஹ்மதி விருந்தினராக இருக்கலாம்; அல்லது பல்வேறு நாடுகளிலிருந்து வந்திருந்த ஜமாஅத்தைச் சாராத விருந்தினராக இருக்கலாம். அனைவரும் இதனை உணர்ந்தனர். நாமோ பலவீனமானவர்கள் ஆவோம். அல்லாஹ்வின் அருளினாலேயே நமது பணிகள் நடைபெறுகின்றன. மேலும், அல்லாஹ்வின் அருட்களின் மழை ஜமாஅத்தின் மீது இவ்வாறு பொழிகின்றது. அதாவது நாம் அதனை எண்ணிப் பார்ப்பது சாத்தியமே இல்லை.

وَ اِنْ تَعُدُّوْا نِعْمَةَ اللّٰهِ لَا تُحْصُوْهَا
اِنَّ اللّٰهَ لَغَفُوْرٌ رَّحِيْمٌ ⑲

(அந் நஹ்ல்: 19) நீங்கள் அல்லாஹ்வின் அருட்கொடைகளை நீர் எண்ணிப் பார்க்க விரும்பினால் பின்னர் உங்களால் அதனை கணக்கிட முடியாது. நிச்சயமாக அல்லாஹ் மிக்க மன்னிப்பவனும், மீண்டும், மீண்டும் கருணை காட்டுபவனும் ஆவான் என்ற அல்லாஹ்வின் இந்தக் கூற்றை நாம் எப்போதும், எல்லா நேரமும் பார்த்து வருகின்றோம்.

எனவே அல்லாஹ்வோ நமது பலவீனங்களை பொருட்படுத்தாமல் எந்த அளவிற்கு அதிகமாக அருளுகின்றான் என்றால் மேலும் எப்படிப்பட்ட வழிமுறைகளின் மூலமாக எல்லாம் நமக்கு அருளுகின்றான் என்றால் நாம் ஒருபோதும் அவனுக்கு நன்றி செலுத்துவதற்கான உரிமையை நிறைவேற்றி விட முடியாது. எனினும், நீங்கள் அதற்கு நன்றி செலுத்திக் கொண்டே செல்லுங்கள் என்ற அல்லாஹ்வின் இந்தக் கட்டளையும் நமக்கு வழங்கப்பட்டுள்ளது. நீங்கள் அல்லாஹ்விற்கு நன்றி செலுத்திக் கொண்டு இருந்து வந்தால் பின்னர் அல்லாஹ் உங்களுக்கு இன்னும் அதிகமாக அருளிக் கொண்டே செல்வான். எனவே நன்றி செலுத்துவது நமது பணியாகும். அல்லாஹ் செய்த அருட்கொடைகளுக்காக அவனுக்கு முன்னால் குனிந்துக் கொண்டே செல்வது நமது பணியாகும். மேலும், நாம் நமது இந்தக் கடமையை செலுத்திக் கொண்டே செல்லும்போதும், எல்லா வெற்றியையும் அல்லாஹ்வின் கருணை என்றும் அருள் என்றும் கருதியவாறு பணி செய்து கொண்டிருக்கும் வரையிலும் இன்ஷாஅல்லாஹ் நமது பாதங்கள் முன்னேறிக் கொண்டே இருக்கும்.

எனவே ஜல்ஸாவின் வெற்றியைத் தொடர்ந்து எல்லாவற்றையும் விட முதலில் நாம் அல்லாஹ்விற்கே நன்றி கூற வேண்டும். மேலும், நிர்வாக ரீதியில் எஞ்சியிருந்த பலவீனங்களுக்காகவும் அவனிடம் பாவமன்னிப்பு வேண்ட வேண்டும். அதேபோன்று, அவன் நமக்கு வாய்ப்பு வழங்கினான்; நாங்கள் ஜல்ஸாவில் கலந்து கொண்டு எங்களது ஆன்மிக மற்றும் அறிவார்ந்த தாகத்தை தணித்துக் கொண்டிருந்தோம் என்று கலந்து கொண்டவர்களும் அல்லாஹ்விற்கு நன்றி செலுத்தவேண்டும். கோவிட் தொற்று இன்னும் முழுமையாக முடிந்துவிடாத நிலையிலும் நமது அனைத்து பணிகளும் எளிதாக அமைந்தன. பொதுவாக, இவ்வளவு பெரிய கூட்டத்திற்கு மத்தியிலும் அல்லாஹ் பாதுகாப்பாக வைத்தான். அல்லாஹ் இதன் பிறகும் அனைவரையும் தனது பாதுகாப்பில் வைப்பானாக. சில நபர்களை ஜல்ஸா நடந்து முடிந்த பிறகு உடனடியாக இல்லையென்றாலும் ஜல்ஸா முடிந்து இரண்டு மூன்று தினங்கள் கழிந்தப் பிறகு இந்த நோய் தாக்கியுள்ளது. அல்லாஹ் அந்த மக்களுக்கு உடல்நலத்தையும், ஆரோக்கியத்தையும் வழங்குவானாக. அப்படிப்பட்ட மிகக் குறைவான மக்களே எனது கவனத்திற்கு வந்துள்ளனர். மேலும், தற்போது எவர்களை இந்தத் தொற்று பாதிக்கின்றதோ அவர்களுக்கு என்னைப் பொருத்த வரை ஜல்ஸாவினால் பாதிப்பு ஏற்படவில்லை. மாறாக, சில இடங்களில் கேஸ்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டிருக்கின்றது என்று பொதுவாக அரசாங்கத்தின் தரப்பிலிருந்து அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது. எனினும், மற்ற நோய்கள் எவ்வாறு கூடி குறைகின்றனவோ அதுபோல (இந்தத் தொற்று நோயும்) தற்போது ஆகிவிட்டது. எவ்வாறு இருப்பினும், அல்லாஹ் நோயாளிகள் அனைவருக்கும் குணத்தை வழங்குவானாக.

தற்போது நான் ஊழியர்களுக்கு நன்றியும் செலுத்த விரும்புகின்றேன். இந்த முறை அனைவருமே மிகச் சிறந்த வடிவில் தமது கடமைகளை ஆற்றியுள்ளனர். மேலும், நான் துவக்கத்தில் கூறியிருந்தது போன்றும், அறிவுறுத்தியிருந்தது போன்றும் அசாதாரண

ரீதியில் புன்சிரித்தவாறு தமது டியூட்டிகளை நிறைவேற்றியுள்ளனர். அல்லாஹ் அனைவருக்கும் நற்கூலி வழங்குவானாக. இந்த முறை தத்தமது துறையின் பணியை நிறைவேற்றுவதில் ஒவ்வொரு ஊழியரிடமும் சிறப்பான ரீதியில் நிபுணத்துவம் தென்பட்டுக் கொண்டிருந்தது. லஜ்னா தரப்பிலிருந்தும், ஆண்கள் தரப்பிலிருந்தும் அனைவரிடமும் இந்த விஷயம் தென்பட்டது. ஒவ்வொரு ஆண்டும் உணவு வழங்குவது மற்றும் தேவையான உணவை கிடைக்கச் செய்வது ஆகிய விஷயங்கள் தொடர்பாக லஜ்னா தரப்பிலிருந்து புகார்கள் இருந்து வந்தன. ஆனல், இந்த முறை இந்த புகாரே இல்லையென்று கூறும் அளவில் நிலைமை உள்ளது. இம்முறை உணவுக் கூடாரம் மற்றும் மற்ற அவசியமான ஏற்பாடுகளுக்கான இடத்தை மாற்றி ஒரு பகுதியிலேயே லஜ்னா சகோதரிகளுக்கு அனைத்து வசதிகளும் ஏற்பாடு செய்து கொடுக்கப்பட்டிருந்தன. இதனையும் பொதுவாக பெண்கள் விரும்பியுள்ளனர். ஏதேனும் குறை எஞ்சியிருந்தாலும் கூட அதனை இன்ஷாஅல்லாஹ் எதிர்காலத்தில் அகற்றுவதற்கு முயற்சி நடைபெறும்.

அதேபோன்று, டிராஃபிக் துறை உள்ளது. உணவு, குடிநீருக்கான துறை உள்ளது. ரொட்டி பிளான்ட் உள்ளது. பாதுகாப்பு (ஏற்பாடுத் துறை) உள்ளது. தூய்மைக்கான பணி உள்ளது. பின்னர் எல்லாவற்றையும் விட MTA துறை உள்ளது. இந்த முறை அது புதிய வடிவில் ஜல்ஸாவை உலகுடன் இணைத்துள்ளது.

எவ்வாறு இருப்பினும் நான் எவர்களுடைய பெயரைக் குறிப்பிட்டிருந்தாலும் சரி இல்லையென்றாலும் சரி. ஆண்கள் பெண்கள் எல்லாரும் மிகவும் கடின உழைப்புடன் தமது கடமைகளை நிறைவேற்றினர்.

எனவே அனைவருக்கும் நான் நன்றியும் செலுத்துகின்றேன். அனைத்து ஊழியர்களின் உழைப்பையும், நல்லொழுக்கத்தையும் வந்திருந்த விருந்தினர்களும் பார்த்து அசாதாரண ஆச்சரியத்தை வெளிப்படுத்தியுள்ளனர். நமது ஊழியர்கள் வெளிப்படுத்தியுள்ள இந்த ஒரு மௌனமான மற்றும் செயல் முன்மாதிரி எப்படிப்பட்டதாக இருந்தது என்றால் அது தப்லீகிற்கான வழிமுறையாக அமைகின்றது. அல்லாஹ் அவர்கள் அனைவருக்கும் சிறந்த நற்கூலியை வழங்குவானாக.

பல்வேறு வெளிநாடுகளிலிருந்து வருகை தந்திருந்த அந்நியர்கள், அவர்களில் முஸ்லிம் அல்லாதவர்களும் இருந்தனர். அவர்களின் உணர்வுகள் என்னவாக இருந்தன? ஜல்ஸாவின் ஏற்பாடுகளையும், ஜல்ஸாவையும் பார்த்து அவர்கள் எவ்வாறு தாக்கத்திற்குள்ளாகினர்? இது தொடர்பான சில கருத்துகளையும் முன்வைக்கின்றேன்; எல்லாவற்றையும் எடுத்துரைப்பது சாத்தியமில்லை.

பேராசிரியர் டாக்டர் ஜியாலூ ஸான். அன்னார் புர்கினாஃபாஸோவின் மிகவும் பிரபலமான கண் மருத்துவர் ஆவார். மருத்துவ பல்கலைக் கழகத்தில் பேராசிரியர் ஆவார். மேலும், இராணுவத்தில் தற்போதைய சர்வீஸ் கர்னல் ஆவார். நமது ஐ இன்ஸ்டியூட்டிற்கும் வந்து கொண்டிருக்கின்றார். அவர் முதல் முறையாக கலந்து கொள்வதற்கு நற்பேறு பெற்றுள்ளார். கூறுகின்றார்: நான் முதல் முறையாக ஜல்ஸாவில் கலந்து கொண்டுள்ளேன். எல்லாவற்றிற்கும் முதலில் என்னை எந்த விஷயம் மிகவும் தாக்கத்திற்குள்ளாக்கியது என்றால், ஆயிரக்கணக்கான நபர்கள் ஒரு பொது நோக்கத்திற்காக ஓரிடத்தில் ஒன்று கூடியுள்ளனர். ஒரு மார்க்கத் தலைவரைச் சுற்றி ஒன்றுதிரண்டுள்ளனர். அவர்கள் அனைவருமே ஒற்றுமையாக உள்ளனர். எல்லாருடைய நோக்கமும் ஒன்றாக உள்ளது.

பின்னர் அசாதாரண ஏற்பாடுகள் செய்துவிடுவதும், பல்வேறு வகையான மக்கள் ஓரிடத்தில் ஒன்று கூடுவதும் மிகவும் ஆச்சரியம் கொள்ளத் தக்க விஷயம் ஆகும். உண்மையில் இது சரிதானா? அல்லது செய்கையானதா? என்பதை அறிந்து கொள்வதற்காக நான் அந்த மக்களை நேரில் சந்தித்து பேசிப் பார்த்தேன். ஆனால், எனக்கு எந்தவொரு நபரின் முகத்திலும் கூட வெறுப்பு தென்படவில்லை.

பல்வேறு பகுதிகள், பல்வேறு சமுதாயங்கள், மற்றும் பல்வேறு வகையான நாடுகளின் பல்வேறுத் துறைகளுடன் தொடர்புடைய தனித் தனியான சமூக வர்க்கங்களுடன் தொடர்புடைய மக்கள் ஒரு நோக்கத்திற்காக ஓரிடத்தில் ஒரு கரத்தில் ஒன்றுகூடுவது அசாதாரண நிகழ்வாகும். எனவே ஜல்ஸாவில் கலந்து கொண்டுள்ள அஹ்மதிகள் இவ்வாறு அந்நியர்களுக்கு செயல் ரீதியில் தப்லீஃக்கும் செய்து கொண்டிருக்கின்றனர்.

அடுத்து கூறுகின்றார்: சொற்பொழிவுகளின் தரம் மிகவும் உயர்ந்ததாக இருந்தது. இந்த சொற்பொழிவுகள் கல்வி கற்பிப்பதிலும், ஒரு நோக்கம் மற்றும் ஒரு திசையை ஒருங்கிணைப்பதிலும் மிகவும் எங்களுக்கு உதவி செய்யக் கூடியதாக இருந்தன. காலத்தின் கலீஃபாவின் சொற்பொழிவையும் நான் கேட்டேன். திருக்குர்ஆன் வசனங்களின் ஒளியில் அன்னார் போதனைகளை எடுத்துரைத்தார்கள்.

மேலும் கூறுகின்றார்கள்: இந்த உலகிற்கு இறைவனின் தூதுச் செய்தியை புரிவதற்கு எந்த அளவிற்கு அவசியம் உள்ளது என்பதையும், அந்த தூதுச் செய்தியை புரிவதற்கு உதவி செய்யக்கூடிய ஒரு நபரின் தேவையும் உள்ளது என்பதையும் நான் தற்போது உணர்ந்துள்ளேன். எனவே அஹ்மதியா ஜமாஅத்திலுள்ள கிலாஃபத் எனும் அமைப்பு எப்படிப்பட்ட ஓர் அமைப்பு என்றால், அதனிடமிருந்து உலகம் பாடம் கற்றுக் கொள்ள முடியும்.

கூறுகின்றார்கள்: நான் கண்ட மற்றொரு விஷயம் என்னவென்றால், அஹ்மதிகளுக்கு இறைவனுடனும், தங்களது இமாமுடனும் அசாதாரண நன்றியுணர்வு மிக்கத் தொடர்பு உள்ளது. அனைவரும் ஒன்றாக உள்ளனர். அனைவரும் பரஸ்பரம் ஓர் இருப்பாக இருக்கின்றார்கள். மேலும், தங்களது இமாம் தங்களுக்கு நேர் வழி காட்டக் கூடியவர் ஆவார் என்று அன்னார் மீது அதிகம் நம்பிக்கை வைத்துள்ளனர்.

கூறுகின்றார்கள்: அல்லாஹ் எனக்கு நற்பேறு வழங்கினால் பின்னர் நான் ஒவ்வொரு வருடமும் ஜல்ஸாவில் கலந்து கொள்வேன் என்று தற்போது இந்த ஜல்ஸாவைப் பார்த்து விட்டு நான் எண்ணம் கொண்டுள்ளேன். ஏனெனில், இங்கு மூன்று நாட்கள் இறைவனுடன் தொடர்பு மற்றும் மனிதத்துவம் தொடர்பான விஷயங்கள் பேசப்படுகின்றன. எனவே நானும் இந்த விஷயங்களைக் கற்பது அவசியம் ஆகும்.

அடுத்தது, அமெரிக்காவிலிருந்து பிரபலமான ஒரு சட்டக் கல்லூரியின் சீனியர் பேராசிரியர் டாக்டர் பிரீட் ஷார்ஃபஷ் ஜல்ஸாவில் கலந்து கொண்டார்கள். கூறுகின்றார்கள்: எனக்கு இங்கு வந்து இவ்வளவு பெரிய கூட்டத்தைப் பார்த்தது மிகுந்த மகிழ்ச்சியை அளித்துள்ளது. மக்களுக்கு இடையிலான ஒத்துழைப்பை குறிப்பாக எடுத்துரைத்தவாறு அன்னார் கூறுகின்றார்கள்: உலகம் முழுவதும் இதுபோன்ற ஏராளமான நிகழ்ச்சிகளை நான் சுயமே நடத்தியுள்ளேன். அங்கு ரிஜிஸ்ட்ரேஷன் நடவடிக்கைகளும் இடம் பெறுகின்றன. ஆனால், ஜல்ஸா ஸாலானாவில் ரிஜிஸ்ட்ரேஷன் விவகாரங்கள் எந்த வழிமுறையின் கீழ் சில நிமிடங்களில் தீர்க்கப்பட்டு விடுகின்றனவோ அவை முற்றிலும் ஒரு ஆச்சரியம் கொள்ளத் தக்க காட்சியாகும். நான் இங்கு வந்து அலுவலகத்தில் அமர்ந்து கொண்டுதான் இருந்தேன். சில நிமிடங்களே ஆகியிருந்தன ;ஆனால் அதற்குள் எல்லா விஷயங்களும் தயார் செய்யப்பட்டு எனக்கு கொடுக்கப்பட்டு விட்டன. பின்னர் என்னிடம் இவ்வாறு கூறப்பட்டது: ஜல்ஸாவிற்கு வருகை தரக்கூடியவர்கள், விருந்தினர்கள் ஆகியோரின் ரிஜிஸ்ட்ரேஷன் மற்றும் இதர அவசியமான நடவடிக்கைகள் முன்னரே நடந்து விடுகின்றன. விருந்தினர்களை அதிக நேரம் காத்திருக்க வைக்கக் கூடாது என்பதற்காக அவ்வாறு செய்யப்படுகிறது.

ரிஜிஸ்ட்ரேஷன் துறையின் ஊழியர்களும் மாஷாஅல்லாஹ் சிறந்த முறையில் கடமையை நிறைவேற்றினர்.

கூறுகின்றார்கள்: விருந்து உபசரிப்பு மிகவும் நன்றாக இருந்தது. இவ்வளவு போக்குவரத்து நெரிசல் இருந்தபோதிலும் தன்னார்வத் தொண்டர்கள் எவ்வாறு ஒற்றுமையுடன் ஒத்துழைப்பு நல்கியவாறு பணி செய்து கொண்டிருந்தார்களோ அது மறக்க முடியாத அனுபவம் ஆகும். சுருக்கமாக, எங்கெங்கெல்லாம் எந்த ஊழியர்களுடன் எல்லாம் தொடர்பு ஏற்பட்டதோ அவர்கள் ஒவ்வொருவரையும் அன்னார் புகழ்ந்துள்ளார்கள்.

பெலீஸ் நாட்டின் ஒரு நகரத்தின் மேயர் வந்திருந்தார்கள். அன்னார் கூறுகின்றார்கள்: இவ்வளவு அன்பு செலுத்தக் கூடிய, அமைதி நிறைந்த மக்களை நான் என் வாழ்நாள் முழுவதும் ஒருபோதும் கண்டதில்லை.சில மக்கள் இஸ்லாத்தை தீவிர வாதத்துடன் ஒப்புமைப்படுத்துவதை என்னால் நம்ப முடியாது. நான் இங்கு கண்ட ஆன்மிக சூழலும், பரஸ்பரம் ஒருவருக்கொருவர் மக்கள் கொண்ட அன்பு, அழகிய நடத்தை ஆகிய அனைத்தும் நிச்சயமாக போற்றுதலுக்குரியதாகும். கூறுகின்றார்கள்: அடுத்த வருடம் மீண்டும் ஜல்ஸாவிற்கு வருவேன் என்று நானோ விருப்பம் கொண்டுள்ளேன். ஒரு மேயர் என்ற அந்தஸ்தில் அல்லாமல், ஒரு தன்னார்வத் தொண்டர் என்ற ரீதியில் வரவேண்டும் என்பது எனது விருப்பம் ஆகும். தன்னார்வத் தொண்டர்களும், பணி செய்யக் கூடியவர்களும் என்னை இந்த அளவிற்கு தாக்கத்திற்குள்ளாக்கி விட்டனர்.

மேலும் கூறுகின்றார்கள்: நானும், இந்த அற்புதமான ஜல்ஸாவின் ஏற்பாடுகளில் ஒரு

அங்கமாக ஆக விரும்புகின்றேன். இப்படிப்பட்ட மகத்துவ மிக்க ஜல்ஸாவை நான் ஒருபோதும் கண்டதில்லை.

பின்னர் கூறுகின்றார்கள்: நிச்சயமாக இந்த உலகத்தின் எதிர்காலம் அஹ்மதிய்யத் ஆகும்.

கானாவைச் சேர்ந்த மைக்கல் வில்ஸன் என்ற ஒரு நண்பர் இருக்கின்றார். சூழலியல் அறிவியல் மற்றும் தொழில் நுட்ப அமைச்சகத்தின் கீழ் இயங்கக் கூடிய அறிவியல் மற்றும் தொழில் ஆராய்ச்சி என்ற ஒரு துறை உள்ளது. அதன் தலைமை தொழில்நுட்ப வல்லுநராக அவர் பணியாற்றி வருகின்றார். அவருக்கு பல்வேறு நாடுகளில் நடைபெறும் கூட்டங்களில் பங்கு பெறுவதற்கான வாய்ப்பு கிடைத்து வருகின்றது. (நமது) ஜல்ஸாவில் கலந்து கொண்டார். ஜல்ஸாவிற்கு முன்னதாக உரையாடலின் போது ஏற்பாடுகளைப் பார்த்துவிட்டு அவர் இவ்வாறு கூறினார்: நான் என்னவெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கின்றேனோ; இதுரை நான் கண்ட விஷயங்களும் இவை அனைத்தும் அல்லாஹ்வின் அருளின்றி ஒருபோதும் சாத்தியம் கிடையாது. இங்குள்ள அனைத்து தன்னார்வத் தொண்டர்களின் அர்ப்பணிப்பு என்னை ஆச்சரியத்தில் உறையச் செய்து விட்டது என்று ஜுமுஆ நாளன்று ஜல்ஸா திடலை அவர் வந்தடைந்தபோது மீண்டும் மீண்டும் கூறிக் கொண்டிருந்தார். உண்மையில் இது இறை ஜமாஅத் ஆகும். இந்த அனைத்து பணிகளும் இறைவனின் அருளின்றி சாத்தியமாக முடியாது. இங்கு நிறைய ஒழுக்கமும், அன்பான சூழலும் உள்ளது. அனைத்து தன்னார்வத் தொண்டர்களும் கல்வியறிவு படைத்தவர்கள். அவர்களில் சிலர் கன்ஸல்ட்டன்ட்டும் ஆவார்கள். ஆனால், ஜல்ஸாவில் அவர்கள் தச்சு வேலைகளையும், தூய்மைப் பணிகளையும் செய்து கொண்டிருந்தனர். இந்த தன்னாவத் தொண்டர்களின் உள்ளங்களில் அல்லாஹ்வின் மீதான அச்சம் இல்லாமல் இருந்திருந்தால் பின்னர் ஒருபோதும் இதுபோன்ற தரமான பணி நடைபெற முடியாது.

ஆக, இவ்வாறு மௌனமாக தப்லீஃக் செய்து கொண்டிருக்கின்ற அந்த அனைத்து ஊழியர்களும் மிகவும் நற்பேறு பெற்றவர்கள் ஆவர்.

பின்னர் ஆலமி பைஅத் நிகழ்ச்சியின் மூலம் மிகவும் தாக்கத்திற்குள்ளாகிவிட்டார்கள். அன்னார் கூறுகின்றார்: அஹ்மதிய்யத் என்றால் என்ன? என்று ஜல்ஸாவிற்கு முன்னர் நான் அறிந்திருக்கவில்லை. ஆனால், தற்போது நான் அறிந்து கொண்டேன். மேலும், இனி நான் ஒவ்வொரு வருடமும் வருவேன் என்று எனக்கு தோன்றுகிறது. பின்னர் அவர் இதனையும் கூறினார்: கானாவில் ஜமாஅத்தை இன்னும் அதிகமாக அறிமுகம் செய்து வைக்க வேண்டும் என்று கானா ஜமாஅத்திற்கு கவனமூட்ட வேண்டும்;

தற்போதும் கூட இன்னும் அதிக வாய்ப்பு உள்ளது.

பின்னர், ஹைதீ( Haiti) யிலிருந்து - அந்நாட்டின் மார்க்க விவகாரத்துறையின் பிரதிநிதியாக மிஸ்டர் ஜோயல்டியூரீன் என்ற விருந்தினர் யூ.கே ஜல்ஸா ஸாலானாவில் கலந்து கொண்டார்கள்.

கூறுகின்றார்கள்: நான் முதன் முறையாக ஜல்ஸாவில் கலந்து கொண்டேன். இந்த அனுபவம் எனக்கு மிகவும் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதாகவும், மகிழ்ச்சிக்குரியதாகவும் இருந்தது. (மாநாட்டு) ஏற்பாடுகள் மிக மிக நன்றாக இருந்தன. நாற்பதாயிரத்திற்கும் கூடுதலான நபர்களின் கூட்டமாக இருந்தபோதிலும் எந்த வகையான நிர்வாக குறைபாடும் தென்படவில்லை. ஒவ்வொரு நபரும் ஒருவர் மற்றவருடன் புன்சிரித்த முகத்துடன் சந்தித்துக் கொண்டிருந்தார். என்னால் எவருக்கும் எந்தத் துன்பமும் ஏற்பட்டு விடக் கூடாது என்ற முயற்சியில் ஒவ்வொரு நபரும் ஈடுபட்டிக் கொண்டிருந்தது தென்பட்டது. இன்னும் கூறப்போனால் ஒருவர் மற்றவரின் நலனை கருத்தில் கொண்டிருந்தனர். இந்த விஷயத்தை நான் வேறு எந்தவொரு மார்க்கம் அல்லது உலகியல் கூட்டங்களிலும் கண்டதில்லை.

இதுவே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எடுத்துரைத்துள்ள ஜல்ஸாவின் ஒரு நோக்கமாகும்.

கூறுகின்றார்கள்: பல்வேறு கலாச்சாரம், நிறம் மற்றும் இனத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தபோதிலும், ஒரே குடும்பத்தின் உறுப்பினர்கள் போன்று ஒருவர் மற்றவரை சந்தித்துக் கொண்டிருந்தனர்.மேலும் தங்கள் அனைவருக்கும் மிகவும் விருப்பமான உணவைப் போன்று ஒரே வகையான உணவை பல்வேறு சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள் சாப்பிட்டுக் கொண்டிருந்தனர்.

எந்த ஒரு விவகாரத்திலும் எந்த ஆட்சேபனையும் அல்லது ஐயங்களும் உங்களுக்கு இல்லையே? என்று நான் ஆஃப்ரிக்காவில் இருந்து வந்திருந்த ஒரு விருந்தினரிடம் கேட்டேன். அதற்கு, இங்கு நாங்கள் அல்லாஹ்வின் திருப்தி, காலத்தின் கலீஃபாவை பார்ப்பது, சந்திப்பது ஆகிய காரணங்களுக்காக மட்டுமே வருகின்றோம். எனவே மற்ற அனைத்து உலகியல் விஷயங்களும் எங்களுக்கு ஒரு பொருட்டே கிடையாது என்று அந்த ஆஃப்ரிக்கர் கூறினார்.

கூறுகின்றார்கள்: இந்த விஷயம் என்னை மிகவும் தாக்கத்திற்குள்ளாக்கியது. எதிர்ப்புக்கு மத்தியிலும் உலகம் முழுவதும் அமைதியை பரப்புவதற்கு ஜமாஅத் முயற்சி செய்து கொண்டிருக்கின்றது என்று அவர் ஜமாஅத்தை மிகவும் புகழ்ந்துள்ளார்.

அடுத்து கூறுகின்றார்கள்: அஹ்மதிகளுக்கிடையில் எந்த வகையான பாகுபாடும் இல்லை. அனைவரும் சமமானவர்களாக இருந்தனர். நான் முதன் முறையாக இதனைப் பார்த்துள்ளேன். எல்லா வயதைச் சேர்ந்த வர்க்கத்தின் நபர்களும் தன்னார்வலராக பல்வேறு தொண்டுகளை ஆற்றிக் கொண்டிருந்தனர். போக்குவரத்து கட்டுப்பாடு உள்ளது. பார்க்கிங் (வாகன நிறுத்தம்) உள்ளது. உணவு சமைக்கும் துறை உள்ளது. குடிநீர் வழங்குதல் உள்ளது. சட்டம் ஒழுங்கு உள்ளது. ஒவ்வொரு நபரும் தமது தொண்டுகளை நிறைவேற்ற வேண்டும் என்ற உணர்வில் நிறைந்திருந்தார். இன்று வரை வேறு எங்கேயும் எனக்கு தென்படாத எண்ணற்ற சிறப்புகளை நான் அஹ்மதிகளிடம் கண்டேன்.

கூறுகின்றார்கள்: நான் ஏராளமான மார்க்க அறிஞர்களின் சொற்பொழிவைக் கேட்டுள்ளேன்; பார்த்துள்ளேன்.அதில் ஒவ்வொரு நபரும் எனது பேச்சைக் கேளுங்கள் என்றே கூறுவார்கள். ஆனால், கலீஃபத்துல் மஸீஹ் அவர்களோ அல்லாஹ்வின் கூற்றையும், முஹம்மது (ஸல்) அவர்களின் கூற்றையும், வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றையும் எடுத்துரைத்தார்கள். மேலும், அவற்றைக் கேளுங்கள்; அதனை பின்பற்றி நடவுங்கள் என்று கூறினார்கள். கூறுகின்றார்கள்: இந்த விஷயம் எனக்கு மிகவும் ஆச்சரியத்திற்குரியதாக இருந்தது.

மூன்று நாட்களும் அன்னார் ஜல்ஸாவில் அமர்ந்து சொற்பொழிவைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். இன்னும்கூறப்போனால், ஏராளமான அஹ்மதிகளை விடவும் மிகவும் கவனமாகக் கேட்டார்கள். ஏனெனில், பல்வேறு சொற்பொழிவுகளின் குறிப்புகளை எடுத்துக் கொண்டிருந்தார்கள். தனது ஒரு டைரியை வைத்திருந்தார்கள். முழுமையான குறிப்புகளை எடுத்துக் கொண்டிருந்தார்கள். அதில் எங்கு ஒரு விஷயம் புரியவில்லையோ அதனை அருகில் இருந்தவர்களிடம் இதன் பொருள் என்ன? என்று கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

அன்னார் கூறுகின்றார்கள்: நான் நிச்சயமாக அஹ்மதி இல்லை தான். ஆனால், இந்த ஜல்ஸாவில் கலந்து கொண்ட பிறகு தற்போது நான் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் வக்கீல் ஆவேன். மேலும், எங்கெல்லாம் முஸ்லிம்களைப் பற்றிய பேச்சு நடைபெறுமோ அங்கு உண்மையான மற்றும் செயல் மிக்க முஸ்லிம்கள் அஹ்மதிகளே ஆவர் என்று நான் கூறுவேன். மேலும், நான் உங்களுக்காக வாதாடுவேன்.

இதேபோன்று இந்தோனேஷியாவின் மார்க்க விவகார அமைச்சர் லுக்மான் ஹக்கீம் ஸைஃபுத்தீன் ஸாஹிப் இருக்கின்றார்கள். அன்னார் கூறுகின்றார்கள்: ஜல்ஸாவில் கலந்து கொண்டு மிகவும் பெருமிதமான உணர்வு எனக்கு ஏற்பட்டுள்ளது. மேலும், எல்லாரிடத்திலும் அன்பு; எவரிடத்திலும் இல்லை வெறுப்பு என்ற உங்களின் முழக்கத்தை லண்டன் ஏர்போர்ட் முதல் பார்க்கத் துவங்கினேன். மேலும், ஜல்ஸா திடல் வரையிலும், ஜல்ஸாவின் நாட்களில் இதனையே பார்த்துக் கொண்டிருந்தேன். எல்லா இடத்திலும் உயர் தரமான விருந்து உபசரிப்பின் வெளிப்பாட்டை பார்த்தேன். சகோதரத்துவத்தின் மிக வலிமையான பந்தத்தை நான் கண்டேன். எல்லா புறமும் ஒருவர் மற்றவரை சந்தித்தல், புன்முறுவலை வெளிப்படுத்துதல், வாழ்த்துகள் கூறுதல், துஆக்களை பகிர்தல் ஆகியவற்றின் காட்சியை நான் கண்டு கொண்டிருந்தேன்.

கேம்பியாவிலிருந்து ஜல்ஸாவில் கலந்து கொண்ட அந்த நாட்டின் மினிஸ்டர் ஆஃப் இன்ஃபர்மேஷன் லாமேன் எஸ்.ஐ ஜாமே ஸாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்:

2023-ம் ஆண்டு ஜல்ஸா ஸாலானாவின் அனைத்து ஏற்பாடுகளையும் கண்டு மிகுந்த தாக்கத்திற்கு நான் ஆளாகினேன். இதை விட ஆச்சரியம் கொள்ளத்தக்க விஷயம், தன்னலமற்றவர்களாக தமது டியூட்டிகளை நிறைவேற்றிக் கொண்டிருந்த அந்த தன்னார்வலர்கள் ஆவர். அவர்கள் சட்டம் ஒழுங்கை நிலை நிறுத்தி வந்தனர். இவ்வளவு பெரிய கூட்டம்; ஆனால், தள்ளுமுள்ளு நடப்பதாகவோ அல்லது ஏதாவது சண்டை சச்சரவு நடப்பதாகவோ ஒரு சம்பவம் கூட காணக் கிடைக்கவில்லை. அனைத்து ஏற்பாடுகளும் அழகிய முறையில் செய்யப்பட்டிருந்தன. அவற்றில் எந்த

குறைபாடும் தென்படவில்லை.

கூறுகின்றார்கள்: என்னால் இந்த விஷயத்தை ஒப்புக் கொள்ளாமல் இருக்க முடியாது; அதாவது, இன்று முழு பூமியில் உண்மையான சகோதரத்துவத்தின் உயிருள்ள சித்திரம் அஹ்மதிய்யா ஜமாஅத்தில் தென்படுகின்றது. மேலும், அங்கு சிரித்த முகத்துடன் நிறம், இனம் என எவ்வித பாகுபாடின்றி ஒருவர் மற்றவரை நூற்றாண்டுகளாக அறிந்திருந்ததைப் போன்று ஒருவருக்கொருவர் சந்தித்துக் கொண்டிருந்தனர்.

அடுத்து கேம்பியாவில் அஹ்மதிய்யா ஜமாஅத் ஆற்றி வரும் தொண்டுகளைக் குறித்து, நாங்கள் அவற்றை மிகவும் கண்ணியமிக்கப் பார்வையுடன் பார்க்கின்றோம் என்று அன்னார் எழுதியுள்ளார்கள்.

அடுத்து, கேம்பியாவிலிருந்து வருகை தந்திருந்த இப்ரீமா ஜீ. சங்காரே (Ebrima G. Sankarreh) அவர்கள் அரசாங்கத்தின் பிரதிநிதி ஆவார்கள்; அன்னார் நாட்டின் அதிபருடைய டயாஸ்போரா (diaspora) துறைக்கான ஆலோசகர் ஆவார்கள். அன்னார் கூறுகின்றார்கள்: ஜல்ஸாவின் ஏற்பாடுகள் அதன் வெற்றியை பறைசாற்றுகின்ற சான்று ஆகும். கலந்து கொண்டவர்கள் அனைவருடைய கட்டுக்கோப்பு, பரஸ்பர சகோதரத்துவம் மற்றும் நேசத்திற்கான உணர்வு கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. அனைத்து உரைகளும், சொற்பொழிவுகளும் ஞானத்தால் நிறைந்திருந்தன. பரஸ்பர நேசம் மற்றும் சமூகத்தில் அமைதியை நிலைநாட்ட வேண்டும் என்று சொற்பொழிவாளர்கள் அறிவுரை செய்தனர்.

பின்னர் கூறுகின்றார்கள்: காலத்தின் கலீஃபா அவர்கள் துவக்கவுரை மற்றும் நிறைவுரையில் சமூகத்தின் வறியவர்கள் மற்றும் ஏழை மக்களுடன் அழகிய முறையில் நடப்பதற்கு வழிகாட்டல்கள் வழங்கினார்கள். மேலும், அதன் மூலமும் நான் மிகவும் தாக்கதிற்குள்ளானேன்.

கூறுகின்றார்கள்: நான் சமூகத்தின் பல்வேறு தரப்பினரான முதியவர்கள் மற்றும் இளைஞர்களை சந்தித்தன் மூலம் எனக்கு இந்த நம்பிக்கை புத்தாக்கம் பெற்றுள்ளது. (அன்னார் தனிப்பட்ட முறையில் மக்களை சந்தித்துக் கொண்டிருந்தார்கள்)

அதாவது, தற்போதைய கடினமான சூழல்களுக்கு மத்தியிலும் உலகின் எதிர்காலம் ஒளிமயமாக உள்ளது என்ற நம்பிக்கை என்னிடம் புத்துயிர் பெற்றுள்ளது. மேலும், உலகை முழு மனித குலத்திற்கும் அமைதி நிறைந்த இடமாக மாற்றுவதற்கு முயற்சி செய்யக் கூடிய மக்களை நான் சந்தித்தேன்.

கூறுகின்றார்கள்: பல்வேறு நாடுகளிலிருந்து வருகை தரக்கூடிய நாற்பதாயிரத்திற்கும் அதிகமான விருந்தினர்களுக்கு ஜமாஅத் எவ்வாறு விருந்து உபசரிப்பு செய்கின்றது? என்ற அமைப்பைப் பார்த்ததும் எனக்கு மிகவும் ஆச்சரியம் ஏற்பட்டுள்ளது. இளம் தலைமுறையின் பேரார்வம் மற்றும் உத்வேகம் மிக்க தன்னார்வத் தொண்டிற்கான உணர்வு எல்லாவற்றையும் விட மிக அதிகமாக தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதாக இருந்தது. அவர்களுடைய கட்டுக்கோப்பு, உயர் அதிகாரிகளுக்கு கண்ணியம் மற்றும் தன்னலமற்ற தொண்டு ஆகியவை எனது மனதில் அழிக்க முடியாத சித்திரங்களை விட்டுச் சென்றுள்ளது. மேலும், உலகின் எதிர்காலம் ஒளிமயமாக உள்ளது. ஏனெனில், இதுபோன்ற இளைஞர்கள் உலகை மிகச் சிறந்த இடமாக மாற்றுவதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கின்றனர்.

எனவே நமது இளைஞர்கள் ஏற்படுத்திய தாக்கம் அந்நியர்களின் மீது ஏற்பட்டுள்ளது. அது ஒரு மௌனமான பிரச்சாரம் ஆகும்.

லுயிஸ் கார்லோஸ் டா ஸில்வா (Luiz Carlos da Silva) பத்திரிகையாளர் ஆவார்கள். பிரேசில் நாட்டின் பேட்ரோல் போலீஸ் சார்பாக வந்திருந்தார்கள். கூறுகின்றார்கள்: அனைத்தும் எனக்கு மிகவும் பிடித்திருந்தது. 118- நாடுகளின் மக்களை ஓரிடத்தில் சகோதரத்துவத்தின் சூழலில் ஒற்றுமையாக இருப்பது வேறு ஒருவருடைய சக்திக்கு உட்பட்ட விஷயம் அல்ல. மக்கள் பரஸ்பரம் கண்ணியம், ஒழுக்கம், உள்ளார்ந்த மகிழ்ச்சி, மற்றும் அனுதாபத்துடன் சந்திப்பது எனக்கு மிகவும் சிறந்ததாக இருந்தது.

பின்னர் அன்னார் ஜல்ஸாவின் நிகழ்ச்சிகளை புகழ்ந்துள்ளார்கள். பின்னர் விருந்தினர்களின் போக்குவரத்திற்கான ஏற்பாடுகளைக் குறித்து மிகச் சிறப்பான ஏற்பாடாக இருந்தது என்றும் அன்னார் கூறியுள்ளார்கள். கூறுகின்றார்கள்: அசாதாரண விஷயமாக இருந்தது.

பின்னர் கூறுகின்றார்கள்: ஒரு விஷயத்தை நான் கூற விரும்புவேன். இவ்வளவு பெரிய ஜல்ஸாவில் ஆயிரக்கணக்கான மக்கள் பணி செய்து கொண்டிருப்பதை நான் பார்த்தேன். அவர்கள் எவரிடமும் செயற்கை தன்மை இருக்கவில்லை. அடுத்து, தன்னார்வலர்கள்: அவர்கள் எவ்வாறு மிகவும் தன்னலமற்றவர்களாக பணி செய்து கொண்டிருந்தனர்! இன்னும் கூறப்போனால், அனைவரும் ஓர் உத்வேகம் மற்றும் உணர்வுடன் பணி செய்து கொண்டிருப்பதை நான் கண்டேன்.

அடுத்து, ஸ்பெயின் நாட்டின் குழுவில் ஒருவர் இருந்தார்கள். அன்னார் பணியின் அடிப்படையில் வரலாற்று ஆசிரியர் ஆவார்கள். அன்னார் Archivist (ஆவண காப்பாளரு)-ம் ஆவார்கள். (அன்னார் ஸ்பெயின் நாட்டிலுள்ள நகரமான) குர்தபாவின் அல்இன்தலிஸ் நூலகத்தில் பணி செய்து வருகின்றார்கள்.

அன்னார் கூறுகின்றார்கள்: ஜல்ஸா ஸாலானாவில் கலந்து கொள்ள வேண்டும் என்ற அழைப்பின் பெயரில் நான் இங்கு வந்துள்ளேன். மிகவும் நன்றி செலுத்துகின்றேன். நான் உங்களிடமிருந்து இஸ்லாம் மற்றும் இஸ்லாமியக் கலாச்சாரத்தைக் குறித்து மிக அதிகமாக கற்றுக் கொண்டுள்ளேன். நீங்கள் எனக்கு மிகவும் விருந்து உபசரிப்பு செய்தீர்கள். மிகவும் கண்ணியம் அளித்தீர்கள். நான் ஒருபோதும் மறக்க முடியாது. பல்வேறு மார்க்கம் மற்றும் கலாச்சாரத்துடன் தொடர்புடைய மக்கள் இவ்வளவு பெரிய எண்ணிக்கையில் ஒன்றாக இணைந்து கூடியிருப்பதை நான் இதற்கு முன்னர் ஒருபோதும் கண்டதில்லை. நிச்சயமாக இந்த அனைத்து மக்களும் அல்லாஹ்வின் நேசத்திற்காக மட்டுமே இங்கு ஒன்று கூடியுள்ளனர்.

கூறுகின்றார்கள்: அஹ்மதிய்யா ஜமாஅத் இன்றைய காலகட்டத்தில் உண்மையிலேயே உறுதி, தைரியம் மற்றும் கடும் முயற்சி ஆகியவற்றிற்கான உயர் முன்மாதிரியை நிலைநாட்டியுள்ளனர். மேலும், இந்த முன்னுதாரணத்தை தினமும் என்னுடைய அன்றாட வாழ்க்கையில் நான் எனது கருத்தில் கொள்வேன். எனக்கும் இது படிப்பினையாகும்.

இத்தாலி நாட்டின் ஒரு பத்திரிகையாளர் வந்திருந்தார்; (அவர் பெயர்) மார்கோ ரெஸ்பின்டி (Marco Respinti) (ஆகும்). ஒரு செய்தித்தாளின் சீஃப் எடிட்டர் ஆவார். அவர் கூறுகின்றார்: நான் ஜல்ஸாவைக் குறித்து முன்னரும் கேள்விப்பட்டுள்ளேன். மேலும் படித்துள்ளேன். ஆனால், அதில் கலந்து கொள்வது என்பது முற்றிலும் ஒரு தனி அனுபவம் ஆகும். நான் தன்னார்வலர்களின் பணியைப் பார்த்து மிகவும் தாக்கத்திற்கு ஆளாகியுள்ளேன். அத்துடன் மற்றொரு விஷயமும் காணக் கிடைத்தது. அது என்னவென்றால், அது மிகச் சிறந்த வகையான கட்டுக்கோப்பு ஆகும். இவ்வளவு பெரிய எண்ணிக்கையை பார்க்கும்போது மிகவும் கடினமான பணியாகும். கூறுகின்றார்கள்: இவ்வளவு பெரிய அளவில் கட்டுப்பாடும், அதன் சுத்தத்திற்கான ஏற்பாடும் ஓர் அசாதாரண விஷயம் ஆகும். ஆயினும், ஜல்ஸாவில் நான் கண்ட எல்லாவற்றையும் விட மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த விஷயம் தொழுகையாகும்.

ஒவ்வொரு நபருக்கும் தொழுகை ஒரு சிறப்பான அந்தஸ்தைக் கொண்டிருந்தது. கூறுகின்றார்கள்: நான் முஸ்லிம் அல்ல. ஆனால், அஹ்மதிகள் எவ்வாறு தொழுவதைப் போன்று தொழுவது ஒவ்வொரு மனிதருக்கும் எல்லாவற்றையும் விட முதல் கடமை ஆகும் என்று நான் கருதுகின்றேன். எனக்கு அங்கு ஆயிரக்கணக்கான மக்களின் ஆர்வம் மற்றும் பொறுப்புணர்வு ஆகியவற்றைப் பார்த்து மிகவும் மகிழ்ச்சி ஏற்பட்டுள்ளது. கூறுகின்றார்கள்: பத்திரிகையாளர் என்ற அடிப்படையில் நான் ஏராளமான மக்களை சந்தித்தேன். புதிய மக்களையும், பழைய மக்களையும் நான் சந்தித்தேன். நான் அறிந்த சிலரும் என்னை சந்தித்தனர். மேலும், எனக்கு அஹ்மதிய்யா ஜமாஅத்தின் வரலாற்றைக் குறித்தும் அதிகமாக தெரிய வந்துள்ளது.

செனிகால் நாட்டின் கோல்டா மண்டலத்தின் கவர்னர் ஸீரான்தாவ் ஸாஹிப் அவர்களும் கலந்து கொண்டார்கள். அன்னார் கூறுகின்றார்கள்: நான் ஜல்ஸாவில் முதன் முறையாக கலந்து கொண்டுள்ளேன். நான் முழுமையான நேர்மையுடன் ஒரு விஷயத்தைக் கூறுகின்றேன்: ஜல்ஸாவில் நான் கண்ட கட்டுக்கோப்பை இதற்கு முன்னர் ஒருபோதும் நான் கண்டதில்லை. கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் மீது அஹ்மதிகளுக்கு எப்படிப்பட்ட அன்பு உள்ளதென்றால் அதனை வார்த்தைகளில் எடுத்துரைக்க முடியாது.

நான் கவர்னர் என்ற ரீதியில் நிறைய பயணம் செய்துள்ளேன். ஆனால், இதுபோன்ற அன்பின் காட்சிகளை நான்

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

ஒருபோதும் கண்டதில்லை. கூறுகின்றார்கள்: நான் வாசித்த ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மேற்கோள்களும் எனது உள்ளத்தில் குடி கொண்டு விட்டன. எனது உள்ளத்தில் அதன் பெரும் தாக்கம் ஏற்பட்டுள்ளது. கூறுகின்றார்கள்: இந்த ஜல்ஸாவில் நான் கண்ட சிறப்பான விஷயம் என்பது தியாக உணர்வு ஆகும்.

ஒருவர் மற்றவருக்காக தியாகம் செய்யுங்கள் என்பதையும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஜல்ஸாவின் நோக்கங்களில் ஒரு நோக்கமாக எடுத்துரைத்துள்ளார்கள்; (ஷஹாதத்துல் குர்ஆன், ரூஹானீ கஸாயீன், தொகுதி 6, பக்கம் 395) இதனை நான் கண்டேன்.

கூறுகின்றார்கள்: ஒவ்வொரு நபரும் தன்னை விட மற்றவருக்கு முன்னுரிமை வழங்குகின்றார்.

கூறுகின்றார்கள்: நான் மாணவப் பருவத்தில் கிலாஃபத் குறித்து நான் கேள்விப்பட்டிருந்தேன். ஆனால், உண்மையான கிலாஃபத்தின் காட்சியை நான் அஹ்மதிய்யா ஜமாஅத்தில் மட்டுமே கண்டுள்ளேன். முஸ்லிம் சமுதாயம் அனைத்தும் அஹ்மதிய்யா ஜமாஅத்தைப் பின்பற்றினால் பின்னர் நிச்சயமாக முஸ்லிம்கள் வெற்றிப் பெற்று விடுவார்கள்.

கொலம்பியாவிலிருந்து ரோஸோ வேலன்சியா என்ற ஒரு விருந்தினர் வந்திருந்தார்கள். அன்னார் கூறுகின்றார்கள்: நான் இங்குள்ள அமைதி நிறைந்த சூழல், சகோதரத்துவம், அன்பு, காலத்தின் கலீஃபாவின் ஞானம் மிக்க சொற்பொழிவுகள் மற்றும் ஜமாஅத் உறுப்பினர்களைக் கண்டு மிகவும் தாக்கம் அடைந்துள்ளேன். கடினமான காலமாக இருந்தபோதிலும் நிலைமைகள் சிறப்பானதாக ஆக முடியும் என்று நாம் நம்பிக்கை கொள்ள வேண்டும்.இந்த உறுதியும் தைரியமும், நான் ஜல்ஸா ஸாலானாவில் என்னவெல்லாம் கண்டேனோ அவற்றிலிருந்து ஏற்படுகின்றது. கூறுகின்றார்கள்: இறைவன் நம்முடன் இருக்கின்றான்; கலீஃபாவின் தூதுச் செய்தி எனது ஆன்மா வரை சென்றடைந்துள்ளது. ஏனெனில், அமைதி ஒரு உச்சபட்சமான மற்றும் சிறந்த வாழ்க்கைக்கான வழிமுறையாகும்.

அடுத்து தன்னார்வலர்களை அன்னார் வெகுவாக பாராட்டியுள்ளார்கள். திகைப்பூட்டக் கூடிய ஏற்பாடு இருந்தது. விருந்து உபசரிப்பு ஆச்சரியம் கொள்ளத் தக்க வகையில் இருந்தது. கூறுகின்றார்கள்: புன்முறுவல் எனக்கு எல்லா இடத்திலும் தென்பட்டது.

கூறுகின்றார்கள்: ஜல்ஸா ஸாலானாவின் தன்னார்வத் தொண்டுகள் உலகிற்கு ஒரு முன்மாதிரியும், இறைவனைத் தேடக் கூடிய மக்களுக்கு அன்பின் பாடமும் ஆகும்.

அடுத்து அர்ஜன்டைன் நாட்டைச் சேர்ந்த யூ.கேவில் பணி நியமனம் செய்யப்பட்டுள்ள தூதரக அதிகாரி ஜைவைர் ஃபிகூரைா (javier Figueroa) அவர்கள் ஜல்ஸாவின் முதல் நாளன்று கலந்து கொண்டார்கள். ஜல்ஸாவின் ஏற்பாடு மற்றும் சூழல் ஆகியவற்றால் எந்த அளவிற்கு தாக்கம் அடைந்தார்கள் என்றால், அன்னார் அதன் பிறகு அர்ஜன்டைன் மற்றும் அதன் சுற்றுவட்டாரத்திலிருந்து கலந்து கொண்டிருந்த அதாவது லத்தீன் அமெரிக்கன் நாடுகளிலிருந்து ஜல்ஸாவிற்கு வருகை தந்திருந்த குழுவினர்கள் அனைவருக்கும் முறையாக ஒரு நிகழ்ச்சிக்கு தமது தூதரகத்தில் அழைப்பு கொடுத்தார்கள். பிற நாடுகளைச் சேர்ந்த தூதர்கள் மற்றும் அவர்களின் தூதரகங்களில் பணியமர்த்தப்பட்டுள்ள வெளியுறவுத் துறை அதிகாரிகளும் ஜல்ஸா நடத்தப்படுவது தொடர்பாக அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக அவ்வாறு செய்தார்கள்.

அன்னார் ஜமாஅத்தின் போதனைகள் மற்றும் சிறப்பான செயல் நடைமுறையினால் மிகுந்த தாக்கத்திற்கு ஆளாகியவாறு சுயமே தமது இந்த விருப்பத்தையும் வெளிப்படுத்தியுள்ளார்கள். அதாவது, தாம் முழுமையான ஒத்துழைப்பு நல்குவதற்கு தயாராக இருப்பதாகவும், குறிப்பாக அரசியல் மட்டத்திலும், தூதரக அதிகாரிகளின் வட்டத்திலும் ஜமாஅத்தைப் பற்றிய அறிமுகத்தை செய்து வைப்பதற்கு நான் முயற்சி செய்வேன் என்றும் அன்னார் கூறியுள்ளார்கள்.

சிலி (Chile) - யிலிருந்து மூன்று நபர்கள் வந்திருந்தனர். இவர்கள் ஒரு கிறிஸ்த்தவ அமைப்பின் மக்கள் ஆவர். அவர்களில் ஒருவர் டாக்டர் நேஸ்ட்டோர் ஸோடோ (Nestor Soto) என்பவர் கிறிஸ்த்தவ பாதிரி ஆவார்கள். அன்னார் ஓர் (Theologian) இறையியலாளரும் ஆவார்கள். சிலி நாட்டின் ஒரு கிறிஸ்த்தவ அமைப்பின் தோற்றுனர் ஆவார்கள்.

அன்னார் கூறுகின்றார்கள்: என்னை எந்த விஷயம் எல்லாவற்றையும் விட மிக அதிகமாக தாக்கத்தை ஏற்படுத்தியது என்றால் அது ஜமாஅத்தின் ஒற்றுமை மற்றும் பரஸ்பர நேசம் ஆகும்.

கூறுகின்றார்கள்: நாற்பது ஆண்டுகளாக உலகம் முழுவதும் பல்வேறு கிறிஸ்த்தவ நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு வருகின்றேன். ஆனால், அஹ்மதிய்யா ஜமாஅத்தின் ஜல்ஸாவைப் போன்ற இந்த அளவிற்கு விரிவான நிகழ்ச்சி அதுவும் தன்னார்வத் தொண்டர்களை மட்டுமே உள்ளடக்கிய நிகழ்ச்சியை வேறெங்கும் நான் கண்டதில்லை.

அன்னார் மிகவும் செல்வாக்கு மிக்க நபர் ஆவார்கள். அமெரிக்க அதிபர் மற்றும் அமெரிக்க அரசாங்கத்துடன் அன்னார் தொடர்பில் இருக்கின்றார்கள். மேலும், அங்கும் அன்னார் உலகின் மார்க்கவாதிகளை ஒன்று கூட்டி மார்க்கக் கூட்டங்களை நடத்தி வருகின்றார்கள்.

எனது எண்ணத்தின் படி உங்களது ஜமாஅத்தினுடைய ஜல்ஸாவின் வெற்றியின் ரகசியம் என்பது காலத்தின் கலீஃபாவின் இருப்பின் மூலமாக நிலைபெற்றுள்ள உங்களது ஒற்றுமை ஆகும் என்று அன்னார் கூறினார்கள். (கிலாஃபத்தும் அல்லாஹ்வின் அருளால் நிலைபெற்றுள்ளது)

ஜமாஅத் உருவாகி 130-க்கும் அதிகமான காலம் ஆகிவிட்டது. மேலும், இதுவரை நம்மில் பரஸ்பரம் பெரும் பிளவுகள் மற்றும் பிரிவினைகள் தோன்றவில்லை என்பது எனது பார்வையில் ஓர் அற்புதமே ஆகும். என்று அன்னார் கூறுகின்றார்கள்.

மேலும் கூறுகின்றார்கள்: எங்களது சுவிசேஷக (Evengelical) கிறிஸ்தவ அமைப்புகள் மற்றும் அதேபோன்று ஏனைய இஸ்லாமிய அமைப்புகளின் மிகப் பெரிய பலவீனமே தலைமைத்துவத்தை அடைய வேண்டும் என்பதற்கான பரஸ்பர சண்டைகளும், கருத்துவேறுபாடுகளுமே ஆகும். கூறுகின்றார்கள்: இதற்கு நேர் மாற்றமாக உங்களுடைய ஜல்ஸாவின் ஏற்பாடு மற்றும் நிகழ்ச்சிகளைப் பார்த்த பிறகு எனக்கு இவ்வாறு தெரிய வருகின்றது: அதாவது, உங்களது ஜமாஅத் ஓர் உடலைப் போன்றதாகும்; காலத்தின் கலீஃபா அந்த உடலின் தலை மற்றும் மூளை ஆவார்கள். மேலும், ஜமாஅத்தைச் சேர்ந்த மற்றவர்கள் அந்த மூளையின் சிக்னல் மற்றும் சைகைகளுக்கு ஏற்ப செயல்படும் ஓர் உடலின் அங்கங்களைப் போன்றவர்கள் ஆவர். எனவே கிலாஃபத்தின் இந்த முக்கியத்துவத்தைக் குறித்த அனுமானத்தை அந்நியர்களும் செய்கின்றனர்.

ஸ்பெயின் நாட்டிலிருந்து தப்லீஃக்கின் கீழ் இருக்கும் ஒரு நண்பர் எலோய் பீரீஸ் (Eloy Perez) ஸாஹிப் கூறுகின்றார்கள்: அரசர்களுடன் நடந்து கொள்ளப்படுவதைப் போன்று இந்த ஜல்ஸாவில் என்னிடம் நடந்து கொள்ளப்பட்டது. என்னை மிக நன்றாக கவனித்தார்கள். எப்போதும் வீட்டின் சூழலையே நான் உணர்ந்தேன்.

அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தன்னார்வலர்கள் நாற்பதாயிரத்திற்கும் அதிகமான மக்களுக்கு தொண்டாற்றுவது என்பது ஓர் அற்புதம் ஆகும். புகைப்படக் கண்காட்சியில் கலந்து கொண்டபோது நான் அஹ்மதிய்யா சமூகத்தைப் பற்றி மிக அதிகமாகக் கற்றுக் கொண்டேன். இது செயல்பாடு கொண்ட மற்றும் உயிருள்ள வரலாற்றின் ஒரு பகுதியாகும். நிகழ்ச்சிகளின்போது நான் சகோதரத்துவத்திற்கான சூழலை உணர்ந்தேன். கூறுகின்றார்கள்: நான் முஸ்லிம் இல்லையென்றாலும் நான் அல்லாஹ்வுடன் தொடர்பு கொண்டுள்ளேன். அல்லாஹ் பல்வேறு மதங்களுடன் இணைந்தவன் ஆவான். நிச்சயமாக அல்லாஹ் தங்களுடனும், அனைத்து அஹ்மதிகளுடனும் ஜல்ஸாவின்போது தென்பட்டான். மேலும், ஞாயிற்றுக்கிழமையன்று அஹ்மதி சகோதரர்கள் தங்களது ஈமானை புதுப்பிப்பதைப் பார்த்து நான் மிகவும் தாக்கமடைந்தேன். அவர்களின் பெரும்பாலார் உணர்ச்சிவயப்பட்டும், மகிழ்ச்சியினாலும் அழுது கொண்டிருந்தார்கள். நிகழ்த்தப்பட்ட சொற்பொழிவுகள் என்னை மிகவும் கவர்ந்தன. அனுதாபம் இல்லாத மார்க்கம் மார்க்கமே இல்லை;எந்த முஸ்லிம் மனித குலத்தின் மீது கருணை காட்டுவதில்லையோ அவர் முஸ்லிம் கிடையாது அல்லது அவர் அல்லாஹ்வை பின்பற்றுபவர் கிடையாது.

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும்
என்னை வணங்குவதற்காகவே
படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில்
குறைவாகவே
துயில் கொண்டனர். (54:18)

A. Shamsul Alam
(Gen.Sec. Melapalayam)

மஸ்ஜிதில் செல்வந்தர் மற்றும் ஏழை என எந்தப் பாகுபாடும் கிடையாது ஆகிய தூதுச் செய்திகளை நான் பெற்று வந்துள்ளேன். (பின்னர் அன்னார் எனக்கு எழுதியுள்ளார்கள்) நான் இதனை ஒப்புக் கொள்கின்றேன். எனக்கு எல்லாவற்றையும் விட மிக அதிகமாக பிடித்த விஷயம், தங்களை நான் தனிப்பட்ட முறையில் சந்தித்தது ஆகும். அடுத்து, தனது டி ஷர்ட்டில் கையொப்பம் இடுங்கள் என்று அன்னார் என்னிடம் தனது விருப்பத்தை வெளிப்படுத்தினார்கள். பின்னர் கையொப்பம் பெற்றுக் கொண்டு சென்றார்கள்.

கனடாவைச் சேர்ந்த Kyle Seeback என்பவர் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் ஆவார்கள். அன்னார் கூறுகின்றார்கள்: ஜல்ஸாவிற்கு நான் வந்தது எனக்கு மிகச் சிறந்த விஷயம் ஆகும். இங்கு தமது மார்க்கத்துடன் பற்றுடன் இருப்பது மற்றும் தன்னார்வத் தொண்டுகளுக்கான படிப்பினை கிடைக்கின்றது. பின்னர் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மீது அநீதி இழைக்கப்படுவது தொடர்பாக அன்னார் கூறினார்கள்: முழு உலகமும் அதற்கெதிராக எழுந்து நிற்க வேண்டும். மேலும், அஹ்மதி சமுதாயத்திற்கு உதவி செய்ய வேண்டும். அஹ்மதி வக்கீல்களுக்கு உதவி செய்ய வேண்டும். அஹ்மதிய்யா பள்ளிவாசல்கள் இடிக்கப்படுகின்றன. இது தொடர்பாக நாம் குரல் எழுப்ப வேண்டும். அதன் பிறகு விஷயங்களை தான் குறிப்பு எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காக அன்னார் ஒரு டைரியை எடுத்துக் கொண்டு வந்தார்கள். அன்னார் கூறுகின்றார்கள்: விஷயங்களைக் கேட்பதிலேயே நான் எந்த அளவிற்கு மெய்மறந்து விட்டேன் என்றால் நான் குறிப்பு எடுப்பதையே மறந்து விட்டேன்.

கனடாவிலிருந்து அன்ட்ஜன்ஸ் சமுதாயத்தின் வைஸ் சீஃப் Aly Bear என்ற பெண்மணி ஆவார்கள். கூறுகின்றார்கள்: நான் இந்த வருடம் எனது மேலும் சில அன்ட்ஜன்ஸ் சமுதாயத் தலைவர்களுடன் ஜல்ஸாவில் வந்தது எனக்கு மிகவும் மகிழ்ச்சிக்குரிய விஷயமாக இருந்தது. உலகளாவிய பைஅத் நிகழ்ச்சி எனக்கு மிகவும் உணர்வுப்பூர்வமான சந்தர்ப்பமாக இருந்தது. ஒவ்வொரு மனிதரையும் மற்றவருடன் நெருக்கமாக்கி விடுகின்ற இதுபோன்ற நிகழ்ச்சியை நான் என் வாழ்க்கையில் ஒருபோதும் கண்டதில்லை. எல்லா மக்களும் உணர்ச்சிவயப்பட்டனர். மேலும், நானும் உணர்ச்சிவயப்பட்டு அழுது கொண்டிருந்தார்கள். உலகளாவிய பைஅத் நிகழ்ச்சியின் வழிமுறை எங்களது இறை வணக்கத்துடன் ஒப்புமை கொண்டதாக இருக்கின்றது. ஆயினும், உலகளாவிய பைஅத்தின் போது நான் உணர்ந்ததைப் போன்ற ஆன்மிகத்தை நான் ஒருபோதும் எனது இறை வணக்கத்தில் உணர்ந்ததில்லை. நான் என்னுடன் அன்பு மற்றும் அமைதியின் தூதுச் செய்தியை எடுத்துக் கொண்டு திரும்பிச் செல்கின்றேன்.

மேலும் அந்தப் பெண்மணி கூறுகின்றார்கள்: எல்லாரிடத்திலும் நேசம்; எவரிடத்தும் இல்லை வெறுப்பு என்ற தங்களின் தூதுச் செய்தியை நான் எனது சமுதாயத்திற்கு எட்ட வைப்பேன். மேலும், இங்கு வருவது எனக்கு மிகவும் கண்ணியத்திற்குரியதும், பெருமிதத்திற்குரியதும் ஆகும்.

ஹோன்ட்ராஸ் நாட்டிலிருந்து ஒரு டி.வியின் பெண் நெறியாளர் கூறுகின்றார்கள்: நான் காலத்தின் கலீஃபாவின் சொற்பொழிவுகளை மிகவும் கவனமாகக் கேட்டேன். ஜல்ஸாவில் கலந்து கொண்டேன். சொற்பொழிவாளர்களின் சொற்பொழிவைக் கேட்டேன். இது போன்ற மகத்துவ மிக்க வாய்ப்பு எனக்கு கிடைத்ததனால் என்னை நான் மிகவும் நற்பேறு பெற்றவராகக் கருதுகிறேன். ஏராளமான மக்களை சந்திப்பதற்கான வாய்ப்பு எனக்கு கிடைத்துள்ளது. மேலும், நான் அவர்களிடம் தன்னலமற்ற தொண்டுகளுக்கான உணர்வைக் கண்டேன்; பணிவைக் கண்டேன். நான் எப்படிப்பட்ட சீரான அமைப்பைக் கண்டேன் என்றால் அதுபோன்ற விஷயத்தை இன்று வரை வேறெங்கும் கண்டதில்லை.

லஜ்னாவிற்கான எனது சொற்பொழிவைக் கேட்ட பிறகு அன்னார் கூறினார்கள்: ஹோன்ட்ராஸ் நாட்டில் எங்கள் அனைவருக்கும் (இதற்கான) தேவை உள்ளது. மக்களுக்கு விஷயங்கள் எளிதாக புரிய வேண்டும் என்பதற்காக பெண்களின் உரிமைகளைப் பற்றி நான் தனியாக ஒரு வீடியோவைத் தயாரிப்பேன்.

துருக்கியிலிருந்து சில அச்சகங்களின் அதிபர்கள் வந்திருந்தனர். நமது பல்வேறு நூல்கள் மற்றும் பிரசுரங்களை அவர்கள் அச்சிட்டு வெளியிட்டுள்ளனர். மிக அழகிய திருக்குர்ஆனும் அங்கிருந்து வெளியாகியுள்ளது. நீங்கள் அதனை புக்ஸ்டாலில் பார்த்திருப்பீர்கள். இந்த அச்சகத்தின் உரிமையாளர்கள் வந்திருந்தனர்.

அவர்களின் இயக்குனர் கூறுகின்றார்கள்: இவ்வளவு பெரிய கூட்டத்தை இவ்வளவு மோசமான காலநிலை இருந்தபோதிலும் நீங்கள் எந்தவொரு பெரிய சிக்கலும் இன்றி எவ்வளவு அழகிய முறையில் நடத்திமுடித்து விட்டீர்கள்! இது எனக்கு மிகவும் ஆச்சரியம் அளிக்கின்றது.

அடுத்து, அன்னார் கூறுகின்றார்கள்: மற்றொரு விஷயத்தை நான் விநோதமானதாகப் பார்க்கின்றேன். (இதுவும் அந்நியர்களின் மீது தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. தப்லீஃக்கின் தாக்கம் ஆகும்).

அன்னார் கூறுகின்றார்கள்: இவ்வளவு பெரிய கூட்டத்தில் புகைபிடிக்கும் ஒருவரைக் கூட நான் காணவில்லை. மேலும், டியூட்டியில் பணியமர்த்தப்பட்டிருந்த ஊழியர்கள் எவ்வாறு கட்டுப்படுதலுடனும், கட்டுக்கோப்பான வழிமுறையுடனும் மக்கள் கட்டளையை ஏற்றுக் கொண்டு செயல்படுத்திக் கொண்டிருந்தார்கள். சிறிய சிறிய பிள்ளைகளின், ஊழியர்களின், சிறுவர்களின், இளைஞர்களின் கட்டளைகளை ஏற்று மக்கள் செயல்பட்டு வந்த அந்தக் காட்சி ஒரு விநோதமான காட்சியாக இருந்தது.

மற்றொரு கம்பெனியின் மற்றொரு இயக்குனர் கூறுகின்றார்கள்: ஜமாஅத் இவ்வளவு பெரியது என்று நான் அனுமானம் செய்திருக்கவில்லை.

: கண்காட்சியின்போது அன்னார் ஷஹீதுகளின் பகுதியை பார்வையிட்டார்கள். அப்போது அதிர்ச்சியடைந்தவாறு இக்காலத்திலும் இவ்வளவு அநியாயம் இஸ்லாத்தின் பெயரால் அதுவும் முஸ்லிம் நாட்டில் நடந்து கொண்டிருக்கின்றதே என்று அன்னார் கூறினார்கள். தந்தை மகன் இருவரும் வந்திருந்தனர்.

கூறுகின்றனர்: ஜல்ஸா ஸாலானா நாட்களில் நடைபெற இருந்த மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த பிஸ்னஸ் மீட்டிங்கின் காரணமாக எங்களின் வருகைக்கான நிகழ்ச்சி இருக்கவில்லை. ஆனால், ஒரு காரணத்தால் மீட்டிங் ரத்தாகிவிட்டது. மேலும், நாங்கள் ஜல்ஸாவிற்கு வருகின்ற நிகழ்ச்சி உருவாகிவிட்டது. மேலும், இது எங்களின் மிகச் சிறந்த நிகழ்ச்சியாக இருந்தது. ஏனெனில் இது மறக்க முடியாத அனுபவம் ஆகும்.

லட்டீவா (Lativa) -விலிருந்து ஜல்ஸாவிற்கு வருகை தந்திருந்த ஒரு சமூக ஆர்வலர் எழுதுகின்றார்கள்: நான் அஹ்மதிய்யா ஜமாஅத்தைப் பற்றி அதிகம் அறிந்திருக்கவில்லை. ஆனால், ஜல்ஸாவின் போது எனக்கு இஸ்லாம் மற்றும் அஹ்மதிய்யத்தைப் பற்றி அதிகம் அறிந்து கொள்வதற்கு கிடைத்தது. நான் திரும்பிச் சென்று திருக்குர்ஆனைப் படிப்பேன். மேலும், இஸ்லாத்தைப் பற்றி நான் எனது அறிவை விசாலமாக்கிக் கொள்வதற்கு முயற்சி செய்வேன். ஜல்ஸா ஸாலானாவின் சூழல் மிகவும் அமைதி நிறைந்த மற்றும் தூய்மையான சூழலாக இருந்தது. ஒவ்வொருவரின் முகத்திலும் புன்முறுவல் இருந்தது. அனைத்து ஊழியர்களும் எங்களை மிகவும் நன்றாக கவனித்தார்கள். கூறுகின்றார்கள்: ஜல்ஸா ஸாலானாவின் விருந்து உபசரிப்பு மற்றும் அழகிய நடத்தை ஆகியவற்றின் தாக்கங்களால் எனது உள்ளம் நிறைந்துள்ளது. ஆனால் நாவினால் எடுத்துரைக்க இயலவில்லை.

உலகில் டி.வியின் முன்பு அமர்ந்து மக்கள் கேட்டுக் கொண்டிருந்தனர். அவர்களில் சிலருடைய கருத்துகளும் வந்துள்ளன.

காங்கோ பிரேசில் நாட்டிலிருந்து நமது முபல்லிஃக் ஸாஹிப் எழுதியுள்ளார்கள்: மிஸ்டர் கிரைஸ்ட் என்ற ஒரு கிறிஸ்தவ நண்பருக்கு ஜல்ஸாவிற்கான அழைப்பு கொடுக்கப்பட்டிருந்தது. நிறைவுரையைக் கேட்ட பிறகு அன்னார் கூறினார்கள்: உலகத்தின் ஒவ்வொரு அரசாங்கமும் இந்த போதனையின் படி அமல் செய்தால் பின்னர் உலகத்திலிருந்து முற்றாக ஏழ்மை ஒழியவில்லையென்றாலும் குறைந்தபட்சம் எந்த ஒரு நபரும் இரவில் பசியுடன் உறங்க மாட்டார்.

கூறுகின்றார்கள்: இந்த சொற்பொழிவைக் கேட்ட பிறகு எனது உள்ளத்திற்கு மிகுந்த நிம்மதி கிடைத்துள்ளது. கூறுகின்றார்கள்: இஸ்லாத்தின் போதனையை நமது கலீஃபா எவ்வாறு எடுத்துரைத்தார்களோ அதன் மூலம் உள்ளத்திற்கு அமைதி கிடைத்து விட்டது. பின்னர் கூறினார்கள்: நான் நமது கலீஃபா என்ற சொல்லை ஏன் பயன்படுத்தினேன் என்றால் இன்றிலிருந்து நானும் உங்களுடன் இருக்கின்றேன்; மேலும் அன்னார் எனக்கும் கலீஃபா ஆவார்கள்.

லித்தியோவிலிருந்து ஜல்ஸாவில் கலந்து கொண்ட Egija Uzane என்ற ஒரு பெண் சமூக ஆர்வலர் கூறுகின்றார்கள்: நாங்கள் இங்கு வந்தது முதல் மிகவும் அழகிய மற்றும் அமைதி நிறைந்த சூழலில் இருந்து வருகின்றோம். எல்லாரின் முகத்திலும் புன்முறுவல் தென்படுகின்றது. மிகவும் விநோதமான அமைதி நிறைந்த சூழல் உள்ளது. நான் திரும்பி எனது சூழலுக்கு செல்லும்போது டென்ஷனுக்கான சூழல் கொண்ட பழைய நிலைக்கே நான் திரும்பி விடுவேன். மேலும், மக்கள் அந்த

சூழலில் ஒருவர் மற்றவரை முறைத்துக் கொண்டிருப்பார்கள்.

ஐயர்லாந்தில் இருந்து ஃபேமிலி ஃபெடரேஷன் ஃபார் வேல்ட் பீஸ் என்ற ஒரு அமைப்பின் மிஷனரி பால் ஹெர்மேன் கூறுகின்றார்கள்: ஜல்ஸா ஸாலானாவில் நான் கலந்து கொண்டதற்கான அனுபவம் துவக்கம் முதல் இறுதி வரை மிகவும் சிறந்ததாக இருந்தது. நான் சந்தித்த அனைத்து ஜமாஅத் உறுப்பினர்களும் மென்மையான உள்ளம் படைத்தவர்களாகவும், அமைதியான மக்களாகவும், பிறரைக் கருத்தில் கொள்ளக் கூடியவர்களாகவும், எந்நேரமும் தொண்டாற்றுவதற்கு தயாராகவும் இருந்தார்கள். தங்குவதற்கு மிகவும் சிறப்பான ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இவை அனைத்தும் மறக்க முடியாத மூன்று நாட்களின் முக்கிய பகுதியாக இருந்தது. இவ்வளவு பெரிய எண்ணிக்கையில் மக்களின் வருகையைக் கருத்தில் கொண்டவாறு செய்யப்பட்டிருந்த ஏற்பாடு மிகச் சிறப்பாக இருந்தது. பின்னர் கூறுகின்றார்கள்: என்னைப் பொருத்த வரை ஊழியர்கள் எந்த அளவிற்கு அனுபவம் வாய்ந்தவர்களாக இருந்தனர் என்றால், அவர்கள் மீது எந்த அளவிற்கு அழுத்தம் ஏற்பட்டாலும் அவர்கள் பதற்றமடைந்திருக்க மாட்டார்கள். பின்னர் கூறுகின்றார்கள்: ஜல்ஸாவில் கலந்து கொண்டவர்களின் ஒத்துழைப்பும் அழகிய ஏற்பாட்டின் பகுதியாக இருந்தது. அவர்கள் செய்திருந்த இவ்வளவு அழகிய தயாரிப்பு என்பது ஜமாஅத் உறுப்பினர்களின் உயர் நல்லொழுக்கத்தின் வெளிப்பாடாகும். இதுமட்டுமின்றி, இந்த மக்கள் தங்களது போதனையின்படியும் அமல் செய்து கொண்டிருக்கின்றனர்.

ஆக, விருந்தினர்கள் மற்றும் விருந்து உபசரிப்பாளர்களின் இந்த தாக்கம் மற்றவர்களின் மீது ஏற்படுகின்றது. சிலமுறை எனக்கு சொற்பொழிவுகளின் மொழியாக்கத்தை புரிவதிலும் கஷ்டம் ஏற்பட்டு வந்தது; ஆயினும், என்ன புரிந்ததோ அதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைந்தேன் என்று மொழியாக்கத்தைப் பற்றிக் கூறினார்கள்.

ஹாலந்து நாட்டின் ஒரு வக்கீல் இருக்கின்றார்கள். அன்னாரும் இதேபோன்று தமக்கு ஏற்பட்ட தாக்கங்களை இவ்வாறு வெளிப்படுத்தியுள்ளார்கள்.

பின்னர் பேர்ரீ இமானுவேல் என்பவர் ஹைத்தீ நாட்டின் நீதிமன்ற காவல்துறையின் பிரதிநிதி ஆவார்கள். கூறுகின்றார்கள்: அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் இன்டர்நேஷனல் ஜல்ஸா ஸாலானா யூ.கேவில் நான் கலந்து கொண்டு இந்த விருந்தினர்களில் ஒருவராக இடம்பெறும் கண்ணியம் எனக்கு கிடைத்தது. ஒரு கிறிஸ்தவராக இந்த ஜல்ஸாவில் கலந்து கொண்ட எனக்கு இஸ்லாத்தைப் பற்றி மட்டுமல்ல இன்னும் கூறப்போனால் மார்க்கத்தைப் பற்றி அதிகமான விஷயங்களை கற்பதற்கு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. பல்வேறு கொள்கைகள், கலாச்சாரங்கள், மொழி, மற்றும் பகுதியுடன் தொடர்புடைய மக்கள் வந்திருந்தனர். அவர்களுடைய நடைமுறைகளும் பல்வேறு வகையானதாக இருந்தன. ஆனால், ஒரே வடிவில் எவ்வாறு இணைந்திருந்தனர்? என்ற இந்தக் காட்சி விநோதமானதாக இருந்தது. நிச்சயமாக அது பாராட்டத் தக்கதும், பின்பற்றத் தக்கதும் ஆகும்.

கூறுகின்றார்கள்: அஹ்மதிகளின் உள்ளங்களில் இருக்கும் நன்றியுணர்வும் தமது மார்க்க கட்டளைகள் மற்றும் கடமைகளின் மீது இருக்கும் மரியாதையும் அவர்களின் உள்ளங்களில் இருக்கும் நயவஞ்சகத்தாலா என்ன? என்று நான் ஜல்ஸாவில் கலந்து கொண்ட பிறகு மிகவும் சிந்தித்தேன். சந்தேகம் உருவானது. எனவே அஹ்மதிகளுக்கிடையில் சகோதரர்கள் என்ற வார்த்தை அவர்களின் அகராதியிலிருந்து ஒருவகையில் நயவஞ்சகம் என்ற வார்த்தையையே அழித்து விடுகின்றது.

எனவே இந்த தாக்கங்கள் ஒவ்வொரு அஹ்மதியையும் தனது ஈமானை பாதுகாக்கக் கூடியவர்களாக ஆக்கிக் கொள்ள வேண்டும். கூறுகின்றார்கள்: நான் எனது நாட்டிற்கு திரும்பிச் செல்லும் போது அன்பு, அமைதி, ஒருவர் மற்றவரைப் பற்றிய உணர்வு, ஈமான், கட்டுப்படுதல் மற்றும் கருணை போன்ற தூதுச் செய்தியை எடுத்துக் கொண்டு செல்வேன். அவை எனக்கு இந்த மறக்க முடியாத மூன்று நாட்களில் கிடைத்துள்ளன.

பின்னர், பிலால் கவ்தன் ஸாஹிப் என்ற ஒரு புதிய அஹ்மதி ஆஸ்திரேலியாவிலிருந்து வந்திருந்தார். அவர் கூறுகின்றார்: எப்போதும் இந்த உணர்வு என்னுடன் இருக்கும். ஆச்சரியம் கொள்ளத் தக்க நாட்களாக இருந்தன. கட்டுக்கோப்பிற்கான வெளிப்பாட்டையும், அன்பு மற்றும் சகோதரத்துவத்தையும் ஒருபோதும் மறக்க முடியாது. கூறுகின்றார்கள்: உலகளாவிய பைஅத்திலும் கலந்து கொள்வது எனக்கு ஒரு புதிய அனுபவமாக இருந்தது. இதன் மூலமாக எனது ஆன்மிகம் அதிகரித்துள்ளது. மேலும் ஓர் ஆறுதல் கிடைத்தது.

மாயூட்ஜலேண்ட்டிலிருந்து யூனுஸ் ஸாஹிப் கலந்து கொண்டிருந்தார்கள். கூறுகின்றார்கள்: ஜல்ஸாவில் முதல் முறையாக கலந்து கொண்டேன். எனவே ஒரு சிறப்பான ஆற்றல் என்னுள் இறங்குவது போன்ற அழுத்தம் எனது உள்ளத்தில் ஏற்பட்டது. ஜல்ஸாவின் காட்சியைக் கண்டு நான் ஆச்சரியத்தில் உறைந்து விட்டேன். கூறுகின்றார்கள்: ஜல்ஸாவைப் பற்றி முன்னர் கேள்விப்பட்டிருந்தேன். கலந்து கொண்ட போது முற்றிலும் வேறொரு காட்சியாக இருந்தது.

அடுத்து, ஜல்ஸாவின் ஏற்பாடுகளைக் கேட்டு பைஅத்துகளும் நடைபெற்றுள்ளன.

கினிபஸாவ் நாட்டில் ஒரு நபர் ஜல்ஸாவின் ஏற்பாட்டை பார்த்து பைஅத் செய்துவிட்டார். தன்ஸானியாவிலிருந்து அமீர் ஸாஹிப் அவர்கள் எழுதியுள்ளார்கள்: இங்கும் MTA-வின் மூலம் ஒருவர் கலந்து கொண்டு பைஅத்தும் செய்து விட்டார். மூஸா ஸாஹிப் என்பவரின் திருமணம் 1970-ல் ஜமாஅத் அல்லாத பெண்ணுடன் நடைபெற்றது. மேலும், மனைவி அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொள்ள வேண்டும் என்பதற்காக அன்னார் முயற்சியும் செய்தார்கள். துஆவும் செய்து கொண்டிருந்தார்கள். ஆனால், அந்தப் பெண்மணி ஒப்புக் கொள்ளாமல் இருந்து வந்தார். இந்த ஜல்ஸாவின்போது அந்தக் குடும்பம் MTA -வில் ஜல்ஸா பார்த்துக் கொண்டிருந்தது. அவர்களின் மனைவியும் அன்னாருடன் பார்க்கத் துவங்கினார்கள். உலகளாவிய பைஅத்திலும் கலந்து கொண்டார்கள். அன்னார் கூறினார்: இந்த ஜல்ஸா என் மீது ஒரு வகையான சிறப்பான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. மேலும், கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் சொற்பொழிவுகள் என்னிடம் ஒரு விநோதமான மாற்றத்தை உருவாக்கியுள்ளது. நான் உலகளாவிய பைஅத்திற்கு முன்னதாக இனி நான் அஹ்மதிய்யத்தில் இணைந்து விடுவேன் என்று முடிவு எடுத்திருந்தேன்.

ஆக, இந்த ஜல்ஸாவின் அருட்களினால் அன்னாரின் மனைவியும் அஹ்மதிய்யத்தில் இணைந்து விட்டார்கள். இவ்வாறு ஏராளமான சம்பவங்கள் இருக்கின்றன. அவை ஜல்ஸாவிற்கு பிறகு கிடைத்துள்ளன. மேலும், இனியும் கிடைத்துக் கொண்டிருக்கும். ஜல்ஸாவின் நிகழ்ச்சிகளை கேட்டு அவர்கள் பைஅத் செய்துள்ளனர்.

நான் கூறியது போன்று அல்லாஹ்வின் அருளினால் எண்ணற்ற கருத்துகள் உள்ளன. மேலும், பலருடைய எண்ணங்கள், தாக்கங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. (அவை எல்லாவற்றையும்) எடுத்துரைப்பது சாத்தியமே இல்லை. அஹ்மதிகளின் வாழ்க்கைகளையும் நிரந்தரமாக அல்லாஹ்வுடன் இணைக்கக் கூடியவர்களாக இருக்கும் அளவில் இந்த ஜல்ஸாவின் விளைவுகளை அல்லாஹ் ஏற்படுத்துவானாக. மேலும், அவர்களின் ஈமானும், உறுதியும் அதிகரிக்கட்டுமாக! மேலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வருகையின் நோக்கத்தை அவர்கள் முழுமை செய்யக் கூடியவர்களாக திகழட்டுமாக! அந்நியர்களின் மீதும் எப்படிப்பட்ட தாக்கங்கள் ஏற்பட வேண்டும் என்றால் அவை வெறும் தற்காலிகமானவையாக அல்லாமல் எதிர் காலத்தில் அவர்களின் கண்களை திறக்கக் கூடிய தாக்கங்களாக அவை இருக்கட்டுமாக! மேலும் அவர்கள் இஸ்லாத்தின் போதனையையே தமது மற்றும் உலகின் இரட்சிப்பிற்கான வழிமுறையாக கருதக் கூடியவர்களாக இருக்கட்டுமாக!

மீடியாக்களின் மூலமாகவும் ஜல்ஸாவின் நிகழ்ச்சிகள் பார்க்கப்பட்டுள்ளன. கேட்கப்பட்டுள்ளன. அதன் மூலம் இந்த முறையும் மிகவும் பரந்த அளவில் அறிமுகம் ஏற்பட்டுள்ளது. ஆஃப்ரிக்க கண்டத்தில் 24 சேனல்கள் சொற்பொழிவுகளை ஒளிபரப்பியுள்ளன. குறிப்பாக எனது சொற்பொழிவை ஒளிபரப்பியுள்ளன. பல நாடுகள் இதில் அடங்கும். மேலும், 40 மில்லியனுக்கும் கூடுதலான மக்கள் வரை இதனை பார்த்துள்ளனர். பத்திரிகையாளர்களும் மீடியா சென்டர்களும் தயார் செய்யப்பட்டன. அவற்றில் 23 மீடியாக்களின் இயக்குனர்களும், பத்திரிகையாளர்களும் கலந்து கொண்டுள்ளனர். மேலும், அன்றாட செய்தி என்ற அடிப்படையில் அறிக்கைகள் தயார் செய்து வந்துள்ளனர். இவ்வாறு 72 செய்தி அறிக்கைகள் தயார் செய்யப்பட்டுள்ளன. அவை சுமார் 40 மில்லியன் மக்கள் வரை சென்று சேர்ந்துள்ளன.

41 வெப்சைட்டுகளில் செய்திகள் ஒளிபரப்பாகியுள்ளன. மேலும், அந்த வெப்சைட்டுகளை படிப்பவர்களின் எண்ணிக்கையும் 19 மில்லியன் எனக் கூறப்படுகின்றது. ஜல்ஸா தொடர்பாக பத்திரிகைகளில் வெளியாகக் கூடிய கட்டுரைகளின் எண்ணிக்கை 15 ஆகும். அவற்றை படிப்பவர்களின் எண்ணிக்கை 5

மில்லியன் எனக் கூறப்படுகின்றது. பல்வேறு டி.வி சேனல்களில் 14 செய்திகள் ஒளிபரப்பாகியுள்ளன. அவற்றை பார்க்கக் கூடியவர்களின் எண்ணிக்கை 20 மில்லியன் என்று கூறப்படுகின்றது. வானொலி நிலையங்களின் மூலம் 37 செய்திகள் ஒலிபரப்பாகியுள்ளன. கடந்த வருடம் எண்ணிக்கை 33 ஆக இருந்தது. இந்த வருடம் அது 37 ஆக அதிகரித்துள்ளது. அவற்றை கேட்கக் கூடிய மக்களின் எண்ணிக்கை 8 மில்லியன் ஆகும். மேலும், தங்களது கருத்துகளையும் மக்கள் வெளிப்படுத்தியுள்ளனர். 20 லட்சம் மக்கள் வரை தூதுச் செய்தி சென்றடைந்துள்ளது. எண்ணற்ற டி.வி சேனல்கள் இருக்கின்றன. அதில் BBC போன்ற சேனல்களும் அடங்கும். யூ.கேவைச் சேர்ந்த ஏராளமான மற்ற நியூஸ் சேனல்களும் அதில் அடங்கும். உலகின் மற்ற நாடுகளுடைய இன்னும் ஏராளமான சேனல்களும் அடங்கும்.

எவ்வாறு இருப்பினும், அல்லாஹ்வின் அருளினால் ஜல்ஸாவின் செய்திகள் சென்றடைந்துள்ளன. ஜமாஅத்தின் அறிமுகம் ஏற்பட்டுள்ளது. இஸ்லாத்தைப் பற்றிய அறிமுகம் ஏற்பட்டுள்ளது. எல்லா ரீதியிலும் அல்லாஹ் இந்த ஜல்ஸாவை அருளுக்குரியதாக ஆக்கியுள்ளான்.

நாம் பணிவான மற்றும் நன்றியுடைய அடியார்களாக திகழ்ந்தவாறு எப்போதும் நம்மை சீர்திருத்திக் கொள்வதற்கான நற்பேறை அல்லாஹ் நமக்கு வழங்குவானாக. மேலும், நாம் ஜமாஅத்துடன் ஒரு சிறப்பான மற்றும் உறுதியான தொடர்பை வைக்கக் கூடியவர்களாக இருப்போமாக. மேலும், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வருகையின் நோக்கத்தை முழுமை செய்யக் கூடியவர்களாக நாம் திகழ்வோமாக.

தமிழாக்கம் மவ்லவி:
A. அப்துர் ரஹ்மான் தாஹிர்

* * * *

## மல்ஃபூஸாத்.. 1-ம் பக்கம் தொடர்ச்சி

உலகப் பணிகளை மேற்கொள்வதை இறைவன் ஆகுமானதாக ஆக்கியுள்ளான். ஏனெனில், அந்த வழியிலும் சோதனை வருவதுண்டு. மேலும், இதே சோதனையின் காரணமாக மனிதன் திருடனாகவும், கொள்ளையனாகவும், ஆகிவிடுகின்றான். மேலும், என்னென்ன தீய பழக்கங்களை மேற்கொண்டு விடுகின்றான். ஆனால், ஒவ்வொரு விஷயத்திற்கும் ஓர் எல்லை உள்ளது. உலகியல் பணிகளை இந்த அளவிற்கு மேற்கொள்ளுங்கள். அதாவது, அவை மார்க்கத்தின் வழியில் உங்களுக்கு உதவி செய்வதற்கான ஏற்பாட்டை உருவாக்கும் அளவில் பயன்படுத்திக் கொள்ளுங்கள். மேலும், அதனை பயன்படுத்துவதன் நோக்கம் மார்க்கமாக மட்டுமே இருக்க வேண்டும். எனவே நாம் உலகியல் பணிகளை மேற்கொள்வதிலிருந்து தடுக்கவில்லை. அதே நேரம், பகலும் இரவும் உலகில் பணிகளிலும், மும்முரங்களிலுமேயே மூழ்கி இறைவனுக்குரிய இடத்திலும் உலகத்தையே நிரப்பிவிடுங்கள் என்றும் நாம் கூறவில்லை. ஒருவர் அவ்வாறு செய்கின்றார் பின்னர் அவர் இழப்பிற்கான காரணிகளை உருவாக்கிக் கொள்கின்றார். மேலும், அவரது நாவு வெறும் வாதம் மட்டுமே எஞ்சியிருக்கின்றது. சுருக்கமாக, உயிருள்ளவர்களின் தோழமையில் தங்குங்கள். அப்போதுதான் உயிருள்ள இறைவனின் வெளிப்பாடு உங்களுக்கு தென்படக் கூடும் . (மல்ஃபூஸாத், தொகுதி 1, பக்கம் 478 -காதியான் பதிப்பு 2018-ம் ஆண்டு)

## தஃப்ஸீரே கபீர்... 1-ம் பக்கம் தொடர்ச்சி

அறிவைப் பற்றிக் கூறப்பட்டுள்ள விஷயம் இந்த சொற்களின் மூலம் வெளிப்படுவதில்லை. ஸஹூக் என்பதன் பொருள் பலவீனமடைந்து விடுவது மற்றும் அழிந்து விடுவது ஆகும். மேலும், இதே போன்றுதான் மக்கத்தினரின் வாழ்க்கையில் நிகழ்ந்ததே தவிர அவர்கள் ஒரு நொடிப் பொழுதில் அழிந்து விடவில்லை. மாறாக, அவர்கள் பலவீனமடையத் துவங்கினார்கள். பின்னர் கொஞ்சம் கொஞ்சமாக அவர்கள் முற்றிலும் அழிந்துவிடும் நேரம் வந்தது. எனவே ஸஹூக் என்ற சொல்லில் அழிவின் விளக்கம் கூறப்பட்டுள்ளது.

மக்கா வெற்றியடைந்த போதும் கஃபத்துல்லாஹ்வில் வைக்கப்பட்டிருந்த சிலைகள் உடைக்கப்பட்டு எறியப்பட்டப்பட்ட அந்தநேரத்திலும் இந்த வசனத்தையே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஓதிக் கொண்டிருந்தார்கள். ஒவ்வொரு சிலையின் மீதும் அடித்தார்கள். மேலும், .

وَقُلْ جَآءَ الْحَقُّ وَزَهَقَ الْبَاطِلُ ؕ اِنَّ الْبَاطِلَ كَانَ زَهُوْقًا ﴿۸۲﴾

என்று கூறிக் கொண்டு சென்றார்கள்.

இது திருக்குர்ஆனின் அற்புதம் ஆகும். கஃபத்துல்லாஹ்விலிருந்து சிலைகள் அகற்றப்பட இருந்த சந்தர்ப்பத்திற்காக வைத்திருந்த இந்த வசனம் கவிதையைப் போன்று பொருத்தமானதாக இருந்தது. இதுபோன்ற மகிழ்ச்சிக்குரிய சந்தர்ப்பத்தில் மனித இயல்பு கவிதையின் பக்கம் ஈர்க்கப்படுகின்றது. திருக்குர்ஆன் கவிதை அல்ல. எனினும் அதன் வசனங்களின் சில பகுதிகள் கவிதையைப் போன்று ஒப்புமைக் கொண்டவையாக இருக்கின்றன.

(துஃப்ஸீரே கபீர், தொகுதி 4, பக்கம் 377, காதியான் பதிப்பு 2010ம் ஆண்டு)

* * * *





Manufacturer and Retailer of Leather Fashion and Bags.
Specialized in the Desing and Production of Quality & Sale Online Platform Like Flipkart, Amazon, Meesho. & Product Key Word is "Grizzly Wallet"
6294738647 mygrizzlyindia@gmail.com, www.mygrizzlyindia.com

my grizzly india
my grizzly india
my grizzly india

**உங்களுக்கு வேலையாட்கள் வேண்டுமா?**

உங்களுக்கு டிரைவர், மேஸ்திரி, மெக்கானிக், எலக்ட்ரீசியன் தேவையென்றால் எங்களை தொடர்பு கொள்ளவும்.

**நாங்கள் உங்களுக்கு நம்பிக்கையான, நல்ல வேலையாட்களை ஏற்பாடு செய்துகொடுப்போம்.**

KHAIRUL-ISLAM
JAYGON-WEST BENGAL 97348 44732


## முக்கிய அறிவிப்பு

காதியான் நூர் மருத்துவமனையில் ஒரு எக்ஸ்ரே ( X-RAY) பணியாளருக்கான தேவை உள்ளது

### நிபந்தனைகள்

1) விண்ணப்பதாரரின் வயது 37-ற்கு அதிகமானதாக இருக்கக் கூடாது. 2) விண்ணப்பதாரர் ஏதாவது அரசாங்க நிறுவனம் அல்லது அங்கீகாரம் பெற்ற ஒரு நிறுவனத்தில் எக்ஸ்ரே டெக்னீஸியன் கோர்ஸ் முடித்திருக்க வேண்டும். மேலும் அந்தப் படிப்பை Paramedical Council of Punjab ஒப்புக் கொள்ள வேண்டும். 3) மருத்துவர்களின் வழிகாட்டல்களை படிப்பதற்கு ஏதுவாக அவர் ஆங்கிலம் நன்றாக படிக்க அறிந்திருக்க வேண்டும்.4) அனுபவம் வாய்ந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். 5) பத்ர் வாரப் பத்திரிகையில் இறுதி அறிவிப்பு வெளியானதிலிருந்து 2 மாதத்திற்குள் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்களே பரீசீலிக்கப்படும்.6) விருப்பம் கொண்ட விண்ணப்பதாரர் தங்களது விண்ணப்பங்களை அச்சிடப்பட்ட படிவத்தில் தங்களது மாவட்ட அமீர்/ உள்ளூர் அமீர்/ உள்ளூர் சத்ர்/முபல்லிஃக் இன்சார்ஜ் ஆகியோரின் ஒப்புதல் கையொப்பத்துடன் அனுப்பி வைக்க வேண்டும் 7) நேர்முகத் தேர்வில் வெற்றி பெற்ற நிலையில் விண்ணப்பதாரருக்கு காதியான் மருத்துவ மனையில் மருத்துவ பரிசோதனை செய்யப்படும்.காதியான் நூர் மருத்துவ மனை கமிட்டியின் அறிக்கைக்கு ஏற்ப உடல் ஆரோக்கியம் பெற்ற விண்ணப்பதாரரே தொண்டாற்றுவதற்கு தகுதி வாய்ந்தவராகக் கருதப்படுவார்.8) தேர்வில் வற்றி பெறும்பட்சத்தில் விண்ணப்பதாரருக்கு காதியானில் தமது தங்குமிடத்திற்கான ஏற்பாட்டை சுயமே செய்து கொள்ள வேண்டும். 9) காதியான் வந்து செல்கின்ற பயணச் செலவு மற்றும் மருத்துவத்திற்கான அனைத்து செலவுகளும் விண்ணப்பதாரரின் பொறுப்பு ஆகும். 10) இந்த பணியிடத்திற்கான விண்ணப்ப படிவத்தை நஸாரத்தே தீவான் அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ள முடியும். 11) விண்ணப்பதாரர் நேர்முகத் தேர்விற்கு வருகை தரும்போது தமது அசல் கல்விச் சான்றிதழ்களை தம்முடன் கண்டிப்பாக கொண்டு வர வேண்டும்.

**குறிப்பு: எழுத்துத் தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வின் தேதி விண்ணப்பதாரர்களுக்கு பின்னர் தெரிவிக்கப்படும்.**

**மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ளுங்கள்**

நஸாரத் தீவான் சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யா காதியான் - 143516
கைபேசி எண்: 09646351280, 09682587713 அலுவலக எண்: 01872-501130
E-mail: diwan@qadian.in

# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் மீது ஹைதராபாத் முன்ஸிஃப் பத்திரிகை செய்துள்ள ஆட்சேபனைகளுக்கான பதில்

**என்னை காஃபிர் என்று கூறி தமது குஃப்ரின் மீது முத்திரையிட்டுக் கொள்கின்றனர்**
**இதுவே அவர்கள் அனைவரின் முகங்களாகும். நாமோ பிரதிபலிக்கும் கண்ணாடி ஆவோம்**

**( வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் உறுதி மொழி வழங்கப்பட்ட மஹ்தி ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் (அலை) அவர்களின் கவிதை)**

அஹ்மதிகள் முஸ்லிம்கள் அல்ல என்று கடந்த நாட்களில் ஆந்திர மாநிலத்தின் வக்ஃப் போர்ட் சார்பாக அறிக்கை கொடுக்கப்பட்டது. மேலும், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தைச் சேர்ந்தவர்களை முஸ்லிம் அல்லாதவர்களாக அறிவிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து சிறுபான்மையினருக்கான மத்திய அமைச்சர் ஸ்மிருதி ராணி ஜூலை 26, 2023 புதன்கிழமை அன்று ஆந்திர வக்ஃப் போர்ட்டின் இந்த நடவடிக்கை தவறானது எனக் குறிப்பிட்டவாறு, எந்தவொரு மாநிலத்தின் வக்ஃபோர்டிற்கும் எந்தவொரு மனிதரையோ அல்லது சமூகத்தையோ அவர்களின் மார்க்கத்திலிருந்து வெளியேற்றுவதற்கு எந்த அதிகாரமும் கிடையாது என்று கூறினார்கள்:

அன்னார் கூறினார்கள்: அனைத்து வக்ஃப்போர்ட்களும் நாடாளுமன்றத்தின் மூலமாக உருவாக்கப்பட்ட சட்டத்தின் கீழ் வருகின்றன. எந்தவொரு வக்ஃப்போர்டும் நாட்டின் நாடாளுமன்றத்தின் கண்ணியத்திற்கு பாதிப்பை ஏற்படுத்த முடியாது. மேலும் நாடாளுமன்றத்தால் உருவாக்கப்பட்ட சட்டங்களுக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாது. அன்னார் மேலும் கூறினார்கள்: தாங்கள் கொடுக்கும் ஃபத்வாக்களின் மூலம் அரசாங்கக் கட்டளைகளில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு எந்தவொரு வக்ஃப் போர்டிற்கும் அனுமதி வழங்க முடியாது. நாங்கள் இந்த விவகாரம் குறித்து ஆந்திர மாநிலத்தின் தலைமைச் செயலாளரிடம் பதில் கேட்டுள்ளோம்

ஸ்மிருதி ராணி அவர்களின் இந்த அறிவிப்பால் முஸ்லிம் ஆலிம்கள், அமைப்புகள் மற்றும் செய்தித்தாள்கள் தங்களது கோபத்தை வெளிப்படுத்தியுள்ளனர். மேலும், ஸ்மிருதி ராணியின் இந்த அறிக்கையை தவறு எனக் குறிப்பிட்டவாறு வக்ஃப் போர்டின் கூற்றை சரியானதாகவும், ஆகுமானதாகவும் குறிப்பிட்டுள்ளார்கள். மேலும், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தை காஃபிர் என்றும் முஸ்லிம் அல்லாதோர் என்றும் குறிப்பிடுவதற்கு தங்களது சுய விருப்பத்தின்படி, பொருத்தமற்ற சான்றுகளை கொடுத்துள்ளனர். அதுமட்டுமின்றி, சில பொய்யான ,மிகவும் புனையப்பட்ட மற்றும் அடிப்படையற்ற குற்றச் சாட்டுகளை ஜமாஅத்தின் மீது சுமத்தியுள்ளனர். இன்ஷாஅல்லாஹ் நாம் அவர்களுடைய அனைத்து புனையப்பட்ட, அபத்தமான,ஆதாரமற்ற மற்றும் பொய்யான ஆட்சேபனைகளுக்கு விரிவான பதில் வழங்குவோம்.

ஜம்இயத்துல் உலமா ஹிந்த் என்ற அமைப்பு ஒரு பத்திரிகை செய்தியை வெளியிட்டவாறு இவ்வாறு எழுதியுள்ளது: அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தை முஸ்லிம் அல்லாத அமைப்பினர் என்று அறிவித்த ஆந்திர வக்ஃப் போர்டின் நிலைபாடு சரியானது ஆகும். மேலும், இது தொடர்பாக மத்திய அமைச்சர் ஸ்மிருதி ராணியின் வலியுறுத்தல் பொருத்தமற்றதும், தவறானதும் ஆகும்.

ஜம்இயத்துல் உலமா ஹிந்த் அமைப்பு அஹ்மதிய்யா ஜமாஅத்தை முஸ்லிம் அல்லாதோர் என்று அறிவித்ததில் என்ன சான்றுகளை வழங்கியுள்ளது? அதன் விளக்கத்தை நாம் கீழே வழங்குகின்றோம். ஜமீயத் உலமா சபை தனது பத்திரிகை செய்தியில் இவ்வாறு எழுதியுள்ளது:

இரண்டு முக்கிய கொள்கைகளில் இஸ்லாத்தின் அடித்தளம் உள்ளது. 1) தவ்ஹீத்- அதாவது அல்லாஹ்வை அவனது இருப்பிலும், பண்புகளிலும் ஏகனாக ஒப்புக் கொள்வது; மேலும், அவனுடன் எவரையும் இணையாக்காமல் இருப்பது. 2) நபித்துவம்- அதாவது, ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களை இறைவனின் தூதர் என்றும், இறுதி நபி என்றும் நம்புவது. அன்னாருடன் வஹீ மற்றும் நபித்துவத்தின் தொடர் முற்றுப் பெற்று விட்டது.மேலும் அன்னாரின் ஷரீஅத் இறுதியான மற்றும் முழுமையான ஷரீஅத் ஆகும்.

இந்த இஸ்லாமியக் கொள்கைகளுக்கு எதிராக மிர்ஸா குலாம் அஹ்மத் காதியானி எப்படிப்பட்ட கொள்கையை மேற்கொண்டுள்ளார் என்றால் அது கத்மே நுபுவ்வத் கொள்கைக்கு முற்றிலும் எதிரானதாகும். இந்த அடிப்படையான மற்றும் நடைமுறை கருத்துவேறுபாடு இருக்கும் நிலையில் காதியானிய்யத்தை இஸ்லாமியப் பிரிவுகளில் கணக்கிடுவதற்கு எந்த ஒரு முகாந்திரமும் இருக்கவில்லை. மேலும், இஸ்லாமிய சமுதாயத்தின் அனைத்து அறிஞர் பெருமக்களும் இந்தப் பிரிவினர் முஸ்லிம் அல்லாதோர் என்பதில் ஒருமித்த கருத்து கொண்டுள்ளனர்.

இது தொடர்பாக ராப்தா ஆலமே இஸ்லாம் என்ற பிரபலமான அமைப்பு 1974-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 6 முதல் 10 வரை நடைபெற்ற தனது கூட்டத்தில் 110 நாடுகளிலிருந்து கலந்து கொண்டிருந்த முஸ்லிம் அமைப்புகளின் பிரதிநிதிகள் ஒருமித்த கருத்துடன் காதியானிய்யத் தொடர்பான ஆலோசனைக்கு ஒப்புதல் வழங்கியவாறு இந்தப் பிரிவு இஸ்லாமியப் பிரிவிலிருந்து வெளியேறிய பிரிவு என்றும், முஸ்லிம் விரோதி பிரிவு என்றும் அறிவித்துள்ளனர். ஆக, அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தை முஸ்லிம் அல்லாத அமைப்பாக ஜமீயத்துல் உலமா சபை அறிவித்ததற்கு கீழ் கண்ட காரணங்கள் கூறப்பட்டுள்ளன:

* அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் அல்லாஹ்வின் ஏகத்துவத்தின் மீது ஈமான் கொள்ளவில்லை. மேலும், அவனது இருப்பு மற்றும் பண்புகளில் அவனை இணையற்றவனாக கருதவில்லை. (நவூதுபில்லாஹ்)

* அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை இறுதி நபி என ஏற்றுக் கொள்வதில்லை.

* ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் வஹீ மற்றும் நபித்துவம் முடிந்து விட்டதை ஒப்புக் கொள்வதில்லை. மேலும், அன்னாரின் ஷரீஅத்தை இறுதியானது என்றும் முழுமையானது என்றும் ஒப்புக் கொள்வதில்லை .

* இஸ்லாமிய சமுதாயத்தின் அனைத்து அறிஞர் பெருமக்களும் இந்தப் பிரிவு முஸ்லிம் அல்லாத பிரிவு ஆகும் என்பதில் ஒருமித்தக் கருத்து கொண்டுள்ளனர்.

*இந்தப் பிரிவு இஸ்லாத்திலிருந்து வெளியேறிய பிரிவு என்றும் முஸ்லிம் விரோதி பிரிவு என்றும் ராப்தா ஆலமே இஸ்லாம் என்ற அமைப்பு அறிவித்து விட்டது.

அல்லாஹ்வின் ஏத்துவம் மற்றும் அவனது இருப்பிலும் பண்புகள் தொடர்பாகவும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தொடர்பாகவும் ஜமீயத் அமைப்பு அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தைப் பற்றி என்னென்ன விஷயங்களை கூறியுள்ளதோ அவை அனைத்தும் துர்நாற்றம் வீசும் பொய் மூட்டையேயன்றி வேறில்லை. நாம் இந்த அனைத்து ஆட்சேபனைகளுக்கும், குற்றச்சாட்டுகளுக்கும் விரிவான பதில் கொடுப்போம். அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் அல்லாஹ்வின் ஏகத்துவத்தின் மீதும் அவனது இருப்பு மற்றும் பண்புகளின் மீதும் முழுமையாக ஈமான் கொண்டுள்ளது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை உயிராலும் உள்ளத்தாலும் காத்தமுன்னபிய்யீன் என்று நம்புகின்றது என்பதை மட்டும் முதலில் தெரிவித்துக் கொள்கின்றோம். ஆனால், அல்லாஹ்வின் பண்புகளின் மீது ஈமான் கொள்வதற்கு எந்த அளவிற்கு கடமை உள்ளதோ அந்த அளவிற்கு ஈமான் கொள்ளாத மக்கள் எவராவது இருந்தால் அவர்கள் ஜமீயத் அமைப்பின் ஆலிம்களும், அவர்களைப் போன்ற இதர ஆலிம்களுமே ஆவர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை காத்தமுன்னபிய்யீன் என்று ஏற்றுக் கொள்ளாத கூட்டம் இருக்கின்றது என்றால் பின்னர் அது ஜமீயத் அமைப்பு மற்றும் அதனைப் போன்ற இதர பிரிவுகளே ஆகும். நாம் இந்த விஷயத்தை சான்றுகள் மூலமாக இன்ஷா அல்லாஹ் நிரூபணம் செய்வோம்.

அடுத்து, உள்ளத்தை புண்படுத்துதல் மற்றும் பொய் பேசுவதில் ஹைதராபாத் முன்ஸிஃப் பத்திரிகை ஜமீஅத் அமைப்பைக் காட்டிலும் ஒரு படி முன்னேறிச் சென்று விட்டனர். அந்தப் பத்திரிகை தனது ஜூலை 25-ம் தேதி இதழில் அஹ்மதிய்யா முஸ்லிம்

ஜமாஅத்தின் மீது முற்றிலும் சில பொய்யான குற்றச்சாட்டுகளை சுமத்தியுள்ளது. முன்ஸிஃப் பத்திரிகையின் அந்த குற்றச்சாட்டுகளுக்கு நாம் நமது இதழ்களில் பதில் அளிப்போம். இன்ஷா அல்லாஹ். முன்ஸிஃப் பத்திரிகை எழுதுகின்றது:

*மற்ற மார்க்கங்கள் தொடர்பாக மிர்ஸா குலாம் அஹ்மத் காதியானி மற்றும் அவரை ஏற்றுக் கொண்டவர்களின் கொள்கைகளைப் பற்றியும், கடந்த காலத்தில் ஆங்கிலேயேர்களுடன் இணைந்து காதியானிகள் செய்த சதித் திட்டங்களைப் பற்றியும் பொது மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டிய பொறுப்பு ஜம்இயத்துல் உலமா ஹிந்த், ஜமாஅத்தே இஸ்லாமி, ஜம்இயத்தே அஹ்லே ஹதீஸ், சன்னி உலமா கவுன்சில் மற்றும் குறிப்பாக முஸ்லிம் பர்ஸனல் லா போர்ட்.... ஆகிய அமைப்புகளுக்கு இருக்கின்றது.

* மிர்ஸா குலாம் அஹ்மத் காதியானி அவர்கள் முஜத்தியத், முஹத்திஸியத், மஹ்திவியத், மஸ்லிய்யதே மஸீஹ், மஸீஹிய்யத், நிழல் நபி, உண்மையான நபி, முஹம்மத் (ஸல்) அவர்களின் நிழலாக இருப்பது போன்ற வாதங்களை செய்துள்ளார். எதுவரை என்றால், தன்னை இறைவன் என்றும் (நவூதுபில்லாஹ்) வாதம் செய்துள்ளார்.

* முஸ்லிம்களாகிய நம்மை காதியானிகள் முஸ்லிம்கள் என ஒப்புக் கொள்வதில்லை. ஆக, அவர்களின் பார்வையில் முஸ்லிம்களாகிய நாம் காஃபிர்கள் ஆவோம். மிர்ஸா குலாம் அஹ்மத் காதியானி தமது நூல் தத்கிரா பக்கம் எண்: 519-ல் இவ்வாறு ஃபத்வா வழங்கியுள்ளார்: இறைவன் என் மீது இதனை வெளிப்படுத்தியுள்ளான். அதாவது, எவருக்கு எனது வாதம் சென்றடைந்து விட்டதோ மேலும் அவர்களில் எவர் என்னை ஏற்கவில்லையோ அவர் முஸ்லிம் கிடையாது. மேலும், இறைவனின் பார்வையில் அவர் பிடிக்கப்படுவார்.

*மற்றோர் இடத்தில் மிர்ஸா எழுதியுள்ளார்: இவர் இறைவனால் அனுப்பப்பட்டவரும், இறைவனின் அமீன் என்றும், இவர் இறைவன் புறமிருந்து வந்துள்ளார் என்றும், இவரது எதிரி நரகவாசி என்றும் இவர் என்னவெல்லாம் கூறுகின்றாரோ அதன் மீது கொள்ளுங்கள் என்றும், இந்த இல்ஹாம்களில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது என்னைக் குறித்து மீண்டும், மீண்டும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது வெளிப்படையாகும்.

(ரிஸாலா தஃவத்தே கவம், ருக், பக்கம் 62, அடிக்குறிப்பு)

இந்தக் குழப்பத்திற்கு முடிவு கட்டவில்லையென்றால் பின்னர் (காதியானிகளாகிய) அவர்கள் அரசாங்கத்தை வழிகெடுத்து முஸ்லிம்களின் மஸ்ஜிதுகள் மற்றும் நிறுவனங்களை கைப்பற்றத் தொடங்கி விடுவார்கள்.

இந்த அனைத்து குற்றச்சாட்டுகளுக்கும் நாம் அடுத்த இதழ்களில் வழங்குவோம்.

இந்த அனைத்து குற்றச்சாட்டுகளுக்கும் நாம் பதில் வழங்குவோம்.

* முதல் குற்றச்சாட்டு: மற்ற மார்க்கங்கள் தொடர்பாக மிர்ஸா குலாம் அஹ்மத் காதியானி மற்றும் அவரை ஏற்றுக் கொண்டவர்களின் கொள்கைகளைப் பற்றியும், கடந்த காலத்தில் ஆங்கிலேயேர்களுடன் இணைந்து காதியானிகள் செய்த சதித் திட்டங்களைப் பற்றியும் பொது மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டிய பொறுப்பு ஜம்இயத்துல் உலமா ஹிந்த், ஜமாஅத்தே இஸ்லாமி, ஜம்இயத்தே அஹ்லே ஹதீஸ், சன்னி உலமா கவுன்சில் மற்றும் குறிப்பாக முஸ்லிம் பர்ஸனல் லா போர்ட்.... ஆகிய அமைப்புகளுக்கு இருக்கின்றது.

மற்ற மார்க்கங்களைக் குறித்து அஹ்மதிய்யா ஜமாஅத் மற்றும் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தோற்றுனரின் கொள்கைகள் என்ன? இதேபோன்று அஹ்மதிய்யா ஜமாஅத் அல்லது அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தோற்றுனரும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் உறுதி மொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் (அலை) அவர்கள் ஆங்கிலேயர்களுடன் இணைந்து என்ன சதித் திட்டம் தீட்டினார்கள்? நாம் இதற்கு பதில் அளிப்பதற்கு ஏதுவாக அது குறித்து எந்த விளக்கமும் அந்தப் பத்திரிகையின் ஆசிரியர் வழங்கவில்லை. இந்நிலையில் அது போன்ற மேலோட்டமான குற்றச்சாட்டுகளுக்கு நாம் என்ன பதில் அளிப்பது? எந்த விஷயத்தில் பொய்யிற்கான ஐயம் இருக்குமோ மேலும் எது தெளிவாக விளக்கப்பட்டிருக்காதோ அதுபோன்ற மேலோட்டமான விஷயத்தை நீதியை விரும்பக் கூடிய மற்றும் அறிவுடைய ஒவ்வொரு மனிதரும் நிராகரித்து விடுவார்.

மற்ற மார்க்கங்களைக் குறித்து எங்களது கொள்கை இதுவே ஆகும்: எல்லா மார்க்கமும் அல்லாஹ்வின் புறமிருந்தே வந்துள்ளன. ஆனால், கால ஓட்டத்தின் காரணமாக அவற்றில் சீர்கேடுகள் தோன்றிவிட்டன. மேலும், மனிதக் கறைகளுக்கு அவை இரையாகிவிட்டன. திருக்குர்ஆன் போதனைக்கு ஏற்ப ஒவ்வொரு சமுதாயம் மற்றும் ஒவ்வொரு மார்க்கத்திலும் இறைவன் புறமிருந்து நபியும், தூதரும் வந்துள்ளனர். உதாரணமாக அல்லாஹ் கூறுகின்றான்: ஒவ்வொரு சமுதாயத்திற்கும் ஒரு தூதர் உண்டு. (யூனுஸ்: 48). மேலும் ஒவ்வொரு சமுதாயத்தினருக்கும் (இறைவனிடமிருந்து அனுப்பப்பட்ட) வழிகாட்டியொருவர் உண்டு என்று அல்லாஹ் கூறுகின்றான்: (அர்ரஅது: 8)

திருக்குர்ஆனின் இந்த அடிப்படையான கூற்றின் ஒளியில் நாங்கள் ராமரையும், கிருஷ்ணன் அவர்களையும் அல்லாஹ்வின் நபியாக ஏற்றுக் கொள்கின்றோம். நமது இந்த கொள்கைகளை அஹ்மதி அல்லாத சகோதரர்கள் தீயக் கொள்கை என்றும், இஸ்லாத்திற்கு எதிரானவை என்றும் கருதி வந்தனர். ஆனால், தற்போது, இவர்களும் அல்லாஹ்வின் தூதர்களாக விளங்கினர் என்று இவர்களிடமிருந்த குரல் வரத் துவங்கிவிட்டது. அதேபோன்று தற்போது ஜிஹாது தொடர்பான நமது கொள்கையிலும் அவர்கள் ஒருமித்த கருத்து கொண்டவர்களாக தென்படுகின்றனர். காஃபிர்களுடன் எல்லா நிலையிலும் ஜிஹாது கடமையாகும் என்றே முன்னர் அவர்கள் கூறிவந்தனர். ஆனால், தற்போது அவ்வாறு கூறுவதற்கு அவர்களுக்கு தைரியம் இல்லை. தற்போது ஒரே தட்டில் உணவு உண்பதற்கான விஷயங்களை பேசுகின்றனர். காலதாமதமாக புரிந்து கொண்டாலும் பரவாயில்லை. எவ்வாறு இருப்பினும், நமக்குப் பின்னால் அவர்கள் ஒரு நாள் வந்தே தீர வேண்டும். ஒவ்வொரு மார்க்கத்திற்கும், அவற்றின் சான்றோர்களுக்கும், தோற்றுனர்களுக்கும் கண்ணியம் அளிக்க வேண்டும்; மேலும், நுட்பமான ஞானம் மற்றும் அன்புடன் அவர்களுக்கு இஸ்லாத்தின் தூதுச் செய்தியை எட்ட வைக்க வேண்டும் என்று இஸ்லாம் நமக்கு கற்றுத் தருகின்றது. மற்ற மார்க்கங்களைக் குறித்த நமது கோட்பாடை நாம் சுருக்கமாக எடுத்துரைத்துவிட்டோம்.

தற்போது, ஆங்கிலேயர்களுடன் இணைந்து சதித் திட்டம் தீட்டப்பட்டது என்ற குற்றச்சாட்டு எஞ்சியிருக்கின்றது. நாம் ஏற்கனவே கூறியது போன்று அந்தப் பத்திரிகையின் ஆசிரியர் இது தொடர்பாக எந்த விளக்கத்தையும் அளிக்கவில்லை. அதாவது நாம் என்ன சதித் திட்டம் தீட்டினோம்? எவ்வாறு சதித் திட்டம் தீட்டினோம் என்று எதனையும் குறிப்பிடவில்லை. உண்மையிலேயே ஏதாவது அப்படி சதித் திட்டம் தீட்டப்பட்டிருந்தால் பின்னர் அது குறித்த பல்வேறு விஷயங்கள் பொதுவெளிக்கு வந்திருக்கும். முன்ஸிஃப் பத்திரிகையின் ஆசிரியருக்கு அது தொடர்பான சில விஷயங்களையாவது தமது வாசகர்களுக்கு தெரிவித்திருக்க வேண்டும். அல்லது எல்லாவற்றையும் அவர்கள் சுயமே ஆராய்ச்சி செய்து சுற்றித் திரியட்டும் என்று தமது வாசகர்களை அவர் விட்டுவிட்டாரா? தெரியவில்லை. உண்மை என்னவென்றால், இது ஒரு மிகவும் பொய்யான மற்றும் அடிப்படையற்ற குற்றச்சாட்டு ஆகும்.

ஆங்கிலேயர்கள் முஸ்லிம்களின் முயற்சிகள் மற்றும் அவர்களின் கவனத்தை சிதறடிப்பதற்காக மிர்ஸா குலாம் அஹ்மத் காதியானி அவர்களை நிறுத்தியிருக்கின்றார்கள்; நீங்கள் நபித்துவ வாதம் செய்யுங்கள்; அப்போதுதான் முஸ்லிம்கள் எங்களை எதிர்ப்பதை கைவிட்டு விட்டு உங்களை எதிர்ப்பதில் ஈடுபட்டு கொண்டிருப்பார்கள்; மேலும் நாங்கள் நிம்மதி பெருமூச்சு வாங்கிக் கொண்டு இருப்போம் என்று ஆங்கிலேயோர்கள் கூறியதாக கூறப்படுகின்றது. இது முற்றிலும் அறிவற்ற ஆட்சேபனையாகும். மேலும் இது பொய்யான ஒன்றைத் தவிர வேறொன்றும் இல்லை. இந்தக் குற்றச்சாட்டில் ஏதாவது உண்மை இருக்கின்றது என்றால் பின்னர் நிச்சயமாக சிறிதளவாவது ஆதாரங்களை முன்வைத்திருக்க வேண்டும். எவ்வாறு இருப்பினும், நமக்கு வேதனையுடன் இதனை எழுத நேரிடுகின்றது; அதாவது, அவர்களின் முன்னோர்களான மவ்லவி ஸனாவுல்லாஹ் அமிர்த்ஸரி, மவ்வலி முஹம்மது ஹுஸைன் பட்டாலவி ஆகியோர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை எதிர்ப்பதில் தங்களது முழு வாழ்க்கையையும் பொய் பேசுவதில் கழித்து வந்தார்களோ அதேபோன்று அதனையே தொழிலாக இவர்களும் மேற்கொண்டுள்ளார்கள். விஷயம் என்னவென்றால், பொது மக்களுக்கு முன்னால் பொய்யை எடுத்துரைப்பது அவர்களின் நிர்பந்தம் ஆகும். இவர்கள் உண்மையை எடுத்துரைக்கத் துவங்கிவிட்டால் பின்னர் மக்கள் அஹ்மதிய்யத்தின் பக்கம் ஈர்க்கப்பட்டுவிடுவார்கள் என்பதை அவர்கள் நன்கறிவர். ஆனால், உண்மை அவ்வப்போது அவர்களின் வாயில் வந்துவிடவே செய்கின்றது. ஒரு மவ்லானா யூடியூபில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2023-2025 Vol. 8 Thursday 07 September 2023 Issue No.36

**MANAGER**
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

மஸீஹ்(அலை) அவர்களின் ஃபாரசீக கவிதை ஒன்றை மிகவும் உணர்ச்சிப் பொங்கவும், மகிழ்ச்சியுடனும் படித்தார். மேலும், அதன் உருது மொழியாக்கத்தையும் வாசித்தார். மேலும், கூறினார்: இது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் புகழ்ந்தும்,போற்றியும் எழுதப்பட்ட சிறந்த கவிதையாகும். தவ்ஹீதைக் குறித்த ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் நூல்கள் மிகச் சிறந்த நூல்கள் ஆகும் என்றும் அந்த மவ்லவி கூறினார். மிர்ஸா குலாம் அஹ்மத் காதியானி அவர்கள் தன்னிகரற்ற முனாஸிர் (மார்க்க விவாதம் செய்யக் கூடியவர்) ஆக இருந்தார்கள் என்பதை அஹ்மதி அல்லாத ஆலிம்கள் ஒப்புக் கொள்கின்றனர். அன்னார் ஆரியர்கள் மற்றும் கிறிஸ்தவர்களுடன் பெரும் பெரும் மார்க்க விவாதங்கள் செய்தார்கள். மேலும் வெற்றி பெற்றார்கள்.

இப்போது இங்கு இந்தக் கேள்வி எழுகின்றது. அதாவது, மிர்ஸா குலாம் அஹ்மத் (அலை) அவர்கள் கிறிஸ்தவ பாதிரிகளையும், பிரச்சாரகரர்களையும் தோற்கடிக்க வேண்டும்; மேலும் அவர்களின் மார்க்கத்தை தரைமட்டமாக்க வேண்டும் என்பதற்காகவா அன்னாரை ஆங்கிலேயர்கள் நிறுத்தியிருந்தார்கள்? ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் காதியானி (அலை) அவர்களை அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்புகளுக்கு ஏற்ப இக்காலத்தில் மஸீஹ் மற்றும் மஹ்தியாக அனுப்பியிருந்தான் என்ற விஷயம் அறிவுக்கு எட்டவில்லையா? வாக்களிக்கப்பட்ட மஸீஹ் என்ற மகத்துவ மிக்க அந்தஸ்தில் அன்னார் நிலைபெற்றிருந்ததன் காரணமாக அன்னார் (அலை) முழு ஆற்றலுடன் கிறிஸ்த்தவ கொள்கையின் சீர்கேடுகளை எடுத்துரைத்தார்கள். மேலும், அவர்களை சீர்திருத்தம் செய்வதற்காகவும், வழிகாட்டுவதற்காகவும் முழு ஆற்றலை செலவிட்டார்கள். இந்நிலையில்அன்னாரார் (அலை) ஆங்கிலேயர்களுடன் ஒரு கூட்டணி வைத்திருந்தார்கள் என்று எப்படி எண்ணம் கொள்ள முடியும்? ஆங்கிலேயோர்களும் இதுபோன்ற நிலையில் அன்னாருடன் எவ்வாறு கூட்டணி அமைத்திருக்க முடியும். ஏனெனில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களோ ஆங்கிலேயர்களின் மார்க்கத்தையே தரைமட்டமாக்கி விட்டார்கள். எனவே அன்னார் (அலை) ஆங்கிலேயர்களுடன் எந்த வகையிலும் கூட்டணி அமைப்பது சாத்தியமற்ற விஷயம் ஆகும்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

எந்த மக்கள் இறைவனுக்கு பயப்படாமல் நமது தலைவர் ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களை அநியாயமாக தீய சொற்களால் நினைவு கூருகின்றார்களோ மேலும் அன்னார் மீது அசுத்தமான அவதூறுகளை சுமத்துகின்றார்களோ மேலும், அன்னாரை ஏசிபேசுவதிலிருந்து விலகுதில்லையோ அவர்களுடன் நாம் எவ்வாறு சமாதானம் செய்து கொள்ள முடியும்? நான் மெய்யாகவே கூறுகின்றேன்: எம்மால் பாம்புகளுடனும், காடுகளில் வசிக்கும் நரிகளுடனும் சமாதானம் செய்து கொள்ள முடியும். ஆனால், எங்களது உயிர் மற்றும் தாய்,தந்தையரையும் விடவும் நேசத்திற்குரியவரான எங்களது அன்பிற்குரிய நபியின் மீது எவர்கள் அசுத்தமான தாக்குதல் நடத்துகின்றார்களோ அத்தகைய மக்களிடம் எம்மால் சமாதானம் செய்து கொள்ள முடியாது. இறைவன் எங்களை இஸ்லாத்தில் மரணிக்கச் செய்வானாக. ஈமான் பறிபோகின்ற பணிகளை நாம் செய்ய விரும்பவில்லை. (பைகாமே ஸுல்ஹ், ரூஹானீ கஸாயீன், தொகுதி 23, பக்கம் 459)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: நமக்கும், கிறிஸ்தவர்களுக்கும் இரண்டு கிழக்கிற்கும் இடையிலான எவ்வளவு தூரம் உள்ளது? எந்த தூய நபரை அனைத்து படைப்பினங்களிலும் சிறந்தவராக நாம் கருதுகின்றோமோ அவரை அவர்கள் பொய்யர் என்று குறிப்பிடுகின்றனர். எந்த நிலையில் (அதாவது திரித்துவ கொள்கையின் நிலையில்) நமது மார்க்கமும், நமது வேதமும் கிறிஸ்தவ மார்க்கத்தை முற்றிலும் அசுத்தமான மார்க்கமாக கருதுகின்றதோ; மேலும் உண்மையும் அதுவாக இருக்கும் போது பின்னர் நாம் எந்த விஷயத்தில் சமாதானம் செய்வது? நமக்கு கிறிஸ்தவர்களுடன் (இந்தக் கொள்கையின் அடிப்படையில்) மார்க்க ரீதியில் எந்தத் தொடர்பும் இல்லை. (தாஃபில்உல் பலா, ரூஹானீ கஸாயீன், தொகுதி 18, பக்கம் 241)

அதாவது, ஸய்யிதுனா ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு அல்லாஹ்வின் இருப்பு மற்றும் அவனது பண்புகளுடன் எப்படிப்பட்ட தொடர்பு இருந்தது என்றால், அந்நிலையில் திரித்துவக் கொள்கையுடன் சமாதானம் செய்து கொள்வது முற்றிலும் சாத்தியமற்ற விஷயமாக இருந்தது.

*திருக்குர்ஆன் மற்றும் ஹதீஸின் அடிப்படையில், பகுத்தறிவின் அடிப்படையில், மேலும் பைபுளின் அடிப்படையில், வரலாற்று உண்மைகளின் அடிப்படையில் கிறிஸ்தவர்களின் இறைவன் மரணித்தவர் அன்னார் (அலை) என்று நிரூபணம் செய்துவிட்டார்கள். அதன் மூலம் கிறிஸ்தவ கட்டடம் ஒரு நொடிப் பொழுதில் தகர்ந்து விட்டது. ஏனெனில், கிறிஸ்தவத்தின் அடித்தளம் ஹஸ்ரத் ஈஸா (அலை) உயிருடன் இருப்பதிலேயே இருக்கின்றது. ஹஸ்ரத் ஈஸா (அலை) மரணித்துவிட்டார்கள் என்பது நிரூபணம் ஆகிவிட்டால் பின்னர் கிறிஸ்தவம் அழிந்து விடும்.

அன்னார் (அலை) முஸ்லிம்களுக்கு இந்த ஆலோசனையை வழங்கினார்கள்: ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களை மரணிக்க விடுங்கள். அதில் தான் இஸ்லாத்தின் வாழ்வு உள்ளது. ஹஸ்ரத் ஈஸா (அலை)அவர்களோ வானத்தில் உயிருடன் இருக்கின்றார்கள்; ஆனால் உங்களது இறைத் தூதர் முஹம்மது (ஸல்) அவர்களோ மரணித்து பூமியல் அடக்கம் செய்யப்பட்டு விட்டார்கள்; யார் சிறந்தவர்? என்று நீங்களே கூறுங்கள் என்ற இதே ஆயுதத்தின் அடிப்படையில் ஒரு காலத்தில் கிறிஸ்தவ பாதிரிகள் லட்சக்கணக்கான முஸ்லிம்களை கிறிஸ்தவர்களாக மாற்றினர். முஸ்லிம்களிடத்தில் இதற்கு பதில் எதுவும் இல்லாமல் இருந்தது. ஆனால், இதன் பிறகும் கூட கிறிஸ்தவர்களின் இறைவனை நாம் ஏன் மரணித்தவர் என்று கூறுகின்றோம் என முஸ்லிம்களுக்கு நம் மீது கோபம் இருக்கின்றது.

*அன்னார் (அலை) ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் மரணத்தை மட்டும் நிரூபணம் செய்யவில்லை. மாறாக, அவருடைய கப்ர் ஸீரி நகர் கானியார் வீதியில் இருக்கின்றது என்று அன்னாருடைய கப்ரின் முகவரியைக் கூட அறிவித்துக் கொடுத்து விட்டார்கள்.

* அன்னார் (அலை) எப்படிப்பட்ட வலுவான சான்றுகளை வழங்கினார்கள் என்றால், அதன் மூலம் கிறிஸ்தவர்களின் அடிப்படைக் கொள்கையான திரித்துவக் கொள்கையை ரத்து செய்து காட்டினார்கள். எந்த அளவிற்கு என்றால், கிறிஸ்தவம் எனும் கட்டடத்தின் அடித்தளமே ஆடி விட்டது.

**(தொடரும்.........)**

எழுத்து: மன்ஸூர் அஹ்மத் மஸ்ரூர்

தமிழாக்கம்: A. அப்துர் ரஹ்மான் தாஹிர்

**National Watch Company**
**Sales & Service**



**B. Mohamed Adil**
93632 06679
99433 38000

**196, Trichy Road, Sulur - 641 402.**
**Somanur, Anuparpalayam, Karumathampatti.**

O.A. NIJAM
99947 57172

**O.A.N. Doors & Steels**

V.A. SAIT
99430 30230



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-

**5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,**
**{ opp. Karuna Clinic } Tirunelveli-627005**

**Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad**